642

# பூதான ஐயவிளக்கம்

வினோபா

369

சர்வோதயப் பிரசுரம்

Y2wM95
N56 h
109073

# பூதான ஐயவிளக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MA...

ஆச்சாரிய வினோபா பாவே

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)
தஞ்சாவூர்

முதற் பதிப்பு—நவ. ’56—5,000] [விலை அணா 4

YZw M95
N56

# பதிப்புரை

மகான் வினோபா செய்து வரும் பூதான யாத்திரையில் ஆங்காங்கு தொண்டர் மகாநாடுகளும், ஆண்டிற்கு ஒருமுறை அகில இந்திய சர்வோதய மகாநாடும் நடைபெறுகின்றன. இடையிடையே நம் நாட்டையும், வெளிநாட்டையும் சேர்ந்த பத்திரிகை நிருபர்கள் வந்து சந்திக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் பூதானம் பற்றி பலர் பலவிதமாகத் தம் ஐயங்களை வெளியிடுவதும் அவைகளுக்கு அடிகள் தமக்கே உரிய பாணியில் விளக்கம் அளித்து ஐய இருளை அகற்றுவதும் வழக்கமாய் இருந்து வருகிறது. இவ்வாறு உத்தரப்பிரதேசத்திலும், பீகாரிலும் யாத்திரை நடைபெற்றபொழுது எழுந்த–அளிக்கப்பெற்ற ஐயவிளக்கங்களைத் தொகுத்து உத்தரப்பிரதேச பூதான சமிதியார் வெளியிட்டிருந்தார்கள். அதன் தமிழுருவே இது. அடிகளின் பிரார்த்தனைப் பிரசங்கங்கள் அறிவு விருந்துகள் என்றால் இவ்விளக்கங்கள் ரசபுஞ்சங்களான சிற்றுண்டிகள்.

தஞ்சாவூர்
3–11–’56

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வ சேவா சங்கம்)

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
No. 109073

Kabeer Printing Works, Madras (3423)

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சட்டம் | ... | 1 |
| 2. | பூமிதான யக்ஞம் எப்பொழுது வெற்றி பெறும்? | ... | 4 |
| 3. | சமூகப் புரட்சி | ... | 7 |
| 4. | எவ்வளவு காலமாகும்? | ... | 8 |
| 5. | ஹிம்சையா, அஹிம்சையா? | ... | 9 |
| 6. | நிலத்தைத் துண்டாடுதல் | ... | 9 |
| 7. | மட்ட நிலமும் ஒப்புக்கு அளிக்கப்படும் நிலமும் | ... | 12 |
| 8. | கூட்டு விவசாயமும் திட்டக் கமிஷனும் | ... | 15 |
| 9. | 'ஸீலிங்' அல்லது நிலத்தின் அதிகப் பட்ச வரம்பு | ... | 18 |
| 10. | நஷ்டஈடு | ... | 20 |
| 11. | நிலம் அளிப்போர் யார்? | ... | 21 |
| 12. | 'தானம்' என்ற சொல் இழிவைக் குறிப்பதா? | ... | 22 |
| 13. | மேய்ச்சல் புலம் | ... | 23 |
| 14. | நிலச்சுவான்தார்களிடம் வெறுப்பு | ... | 24 |
| 15. | ஏழைகளிடமிருந்தும் தானமா? | ... | 25 |
| 16. | ஜனத்தொகையும் பூதான யக்ஞமும் | ... | 26 |
| 17. | கம்யூனிசத்தின் நாற்றிசைப் பிரசாரமும் பூமிதான யக்ஞமும் | ... | 27 |
| 18. | நிலத்திற்குத் தேவையான சாதனங்கள் | ... | 28 |
| 19. | தானமளிக்கும் எண்ணம் இன்று மக்களுக்கு இல்லையா? | ... | 29 |

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 20. | பூதான யக்ஞும் கம்யூனிசத்தை எதிர்ப்பதற்கான முயற்சியா ? | ... | 30 |
| 21. | முதலில் பூதான யக்ஞமா, சமூகப் புரட்சியா ? | ... | 33 |
| 22. | விவசாயியை நிலத்திலிருந்து அகற்றலும் பூதானமும் | ... | 35 |
| 23. | சிறிதே நிலமுள்ளவர்கள் தான மளிக்கிறுர்களா ? | ... | 37 |
| 24. | வர்க்கப் போராட்டம் | ... | 38 |
| 25. | உதவியும் பிரதிநிதித்துவமும் | ... | 40 |
| 26. | சத்தியாக்ரஹம் | ... | 43 |
| 27. | அமைதியும் புரட்சியும் | ... | 45 |
| 28. | கம்யூனிஸ்டுகளின் சுத்தி | ... | 46 |
| 29. | தீயோர் | ... | 47 |
| 30. | பூதானத்தில் அரசாங்கத்தின் பங்கு | ... | 48 |
| 31. | பூதானமும் ஞானதானமும் | ... | 49 |
| 32. | பூதானமும் பிரம்மசரியமும் | ... | 49 |
| 33. | இது இயந்திர யுகமா ? | ... | 50 |
| 34. | பூதானமும் முதலாளித்துவமும் | ... | 52 |
| 35. | ஹரிஜனங்களின் பிரச்னை | ... | 53 |
| 36. | ஜீவனதானம் | ... | 56 |

# பூதான ஐயவிளக்கம்

## 1. சட்டம்

**ஐயம் : சட்டத்தின் உதவியின்றி நிலப் பிரச்னையைத் தீர்க்க முடியுமா?**

**விளக்கம் :** ரஷ்யாவையும் சீனத்தையும் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். தெலுங்கானா ஹிம்சை முறை பயனற்றது என்பதையும் அஹிம்சைப் புரட்சியின் சக்தியையும் நிரூபித்துவிட்டது. அங்கே ஹிம்சை முறை, சட்டம் ஆகிய இரண்டுமே பயனளிக்கத் தவறின. சட்டம் இயற்றுவோரை விடச் சட்டத்தை மீறுவோருக்கு அதிலுள்ள ஓட்டைகள், பலவீனங்கள் நன்கு தெரியும். ஆகையால் சட்டம் இயற்றியே ஆக வேண்டுமென்றால் அதைச் சிறந்த முறையில் இயற்ற வேண்டும். அதற்குத் தேவையான, அனுகூலமான சூழ்நிலை பூதானத்தின் மூலமே உருவாகும்.

எனக்குச் சட்டமென்றால் விரோதமொன்றுமில்லை. ஆனால் முதலில் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டி வைத்துக்கொண்டு, பின் சட்டம் இயற்றவேண்டும். தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இயற்ற முடிந்தது அதற்குச் சாதகமாகப் பொதுஜன அபிப்பிராயம் இருந்ததனால் தான். எல்லாக் காரியங்களையுமே சட்டத்தின் மூலம் நிறைவேற்றி விடலாம் என்பதை நான் ஒப்பமாட்டேன். ஜாதி வேற்றுமைகளைச் சட்டத்தின் மூலம் அகற்ற முடியுமா? சட்டத்தைக்கொண்டு கலப்பு விவாகங்கள் செய்விக்க முடியுமா?

சாதாரண மனிதனும் ஏற்கக்கூடியதாகச் சட்டம் இருக்க வேண்டும். சட்டத்தை இயற்றிவிட்டு அதைக் கொண்டு பலவந்தமாகக் காரியம் செய்வித்தல் சாத்திய மல்ல. மக்களுக்குச் சம்மதமில்லாத ஒன்றைச் சட்டத் தைக் கொண்டு நிறைவேற்ற முடியாது. மக்கள் ஒன்றைச் சந்தோஷமாய் ஏற்கிருர்கள், அதன் மூலம் அமைதியை, ஒழுங்கை நிலவச் செய்யலாம் என்பதே நாம் சட்டம் இயற்றுகிறேம் என்பதற்குப் பொருள். சட்டத்தை உபயோகமானதாக்குவதோ, 'பாழ்படுத்து வதோ உங்கள் கையில்தானிருக்கிறது. அரசாங்கம் ஒரு சட்டம் இயற்ற, அதை நீங்கள் ஏற்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அச் சட்டத் திற்குப் பொருளென்ன? அரசாங்கம் 14 வயதிற்குக் குறைந்த பிள்ளை—பெண்ணுக்குக் கலியாணம் செய்யக் கூடாதென்று ஒரு சட்டம் செய்தது. ஆனல் நாம் 20 வயது ஆன பிறகுதான் நம் பிள்ளைகள்—பெண்களுக்குக் கலியாணம் செய்விக்கிறேம். அதாவது சட்டம் அதிகப் பட்சத்தையல்ல, குறைந்த பட்சத்தையே குறிப்பதாக இருக்கிறது. அரசாங்கம் சட்டத்தின் மூலம் மக்க ளுக்குப் பணிபுரிய வேண்டும். அரசாங்கம் சட்ட மொன்றை இயற்றிஞல் அதை நாட்டின் எல்லாப் பகுதி களிலும் அமுலுக்குக் கொண்டுவரும். இதுதான் சட்டத்திலுள்ள விசேஷம். ஆனல் சட்டத்தின் மூலம் எவரும் புரட்சி செய்ய முடியாது. புத்த பகவான் காலத்தில் நடந்தது என்னவென்று பாருங்களேன். அதிகாரத்தில் இருந்துகொண்டே புரட்சி செய்திருக்க முடியுமாயின் அவர் அரசாட்சியைத் துறப்பானேன்? இதனலேயே புரட்சிகரமான காரியமெதுவும் சட்டத்தின் உதவியினல் நடைபெறுதென்று சொல்லுகிறேன்.

சூழ்நிலை தகுந்தவாறு உருவாகி விடட்டும், நான் உடனே சட்டமியற்றச் செய்து விடுகிறேன். என் வேலை முறை அஹிம்சை வழியில் செல்லுவது. அஹிம்சை

முறையில் சட்டத்திற்கு இடமில்லை என்பதல்ல. ஆனால் முதலில் பொதுஜன அபிப்பிராயம் வெளியாகவேண்டும். இதற்கு முதலில் பொதுவாக மக்களின் அபிப்பிராயம் அனுகூலமாகுமாறு செய்ய வேண்டும். ஒரு சிலர் எதிர்த்த போதிலும் பெரும்பாலோர் முழு மனதுடன் ஆதரிக்கையில் சட்டத்தின் உதவியை நாம் பெறலாம். இவையெல்லாம் என் வேலைத் திட்டத்தில் உள்ளன. கம்யூனிஸ்டுகளும் சட்டம் வேண்டுமென்கிறார்கள். அவர்களது வேலைத் திட்டத்திலும் சட்டத்திற்கு இட மிருக்கிறது. ஆனால் அங்கே வேலையைக் கொலையில் ஆரம்பித்து, பின்னர் சட்டம் இயற்றுகிறார்கள். ஆகை யால் அவர்களது சட்டத்திலும் ரத்தத்தின் கறை படிந்தே இருக்கிறது. என் வேலையும் ·சட்டத்தில் தான் போய் முடியும். ஆனால் இது தொடங்குவது கருணையில் ஆகும். மக்களுக்கு எல்லா விஷயங்களும் அமைதியாக, பொறுமையுடன் விளக்கிக் கூறப்படும். மக்களுக்கு நாம் சொல்பவை நியாயமானவை, இப்பொழுது நடப்பது அக்கிரமம், இதிலிருந்து தப்ப வேறு வழி யில்லை என்பவை தெளிவாகிவிட்டால் என் வேலை முடிந்தது போலாகும். இவ்வாறு இவ்வேலை கருணை யில் தொடங்கி அஹிம்சை வழியில் செல்லுகிறது. மக்களின் மனோநிலை சாதகமானவுடன் உதவிக்குச் சட்டம் வரும்.

ஏழை எளியோருக்கு நிலம் அளித்தலே நலம் என்ற எண்ணம் எங்கும் பரவிவிடட்டும். சூழ்நிலை உருவாகி விடட்டும். பிறகு நான் சட்டம் இயற்றுவித்து விடு வேன், காத்திருக்கமாட்டேன். 50—50 ஏக்கர் நிலம் சேர்ப்பதற்கு 75—75 வருஷம் கழிக்கத் தேவை இல்லை. மக்களின் மனம் மாறுவதுதான் தாமதம், சட்டம் வந்து விடும். அது ஏற்கெனவே வந்துகொண்டு மிருக்கிறது. நான் மக்கள் மனத்தைப் பக்குவப்படுத்தியதும் அவர் கள் ஆசையாக சட்டத்தை ஏற்பார்கள். உண்மையில்

அது சட்டமாயிராது, அன்பின் அறிகுறியாகவே இருக்கும்.

மேலும், சட்டமென்ருல் அதை மீறுவதற்குத் தண்டனையும் வரும். சில நடைமுறை விதிகளும் வரும். சட்டத்தினுல் பாதிக்கப்படுவோன் சட்டத்திற்குட்பட்டிருந்துகொண்டே முடிந்த அளவு அதன் பிடியிலிருந்து தப்பப் பார்ப்பான். அரசாங்கம் விலைக் கட்டுப்பாடு பற்றிய சட்டம் கொண்டு வரும்பொழுது வியாபாரிகள் அதனுல் லாபம் சம்பாதிக்கப் பார்த்துச் சட்டத்தைப் பயனற்றதாக்கி விடுகிருர்கள். இவ்வாறு ஒருபுறம் வியாபாரிகளும் பணக்காரர்களுமாக, மறுபுறம் அரசாங்கம் நிற்கவேண்டி வருவதால் இருவரும் சேர்ந்து தம் அறிவைப் பயன்படுத்த வேண்டியது போய் 'நம்மில் யார் ஜெயிக்கிரேம்' என்ற போட்டியில் மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கிருர்கள். ஆகையால் சட்டம் இயற்றி விடுவதனுலேயே நான் திருப்தியுறமாட்டேன். சட்டமியற்ற வேண்டியதுதான். அதனுல் ஏழை, எளியோருக்கு அரசாங்கத்திற்கு நம் கவலை யிருக்கிறது என்ற நம்பிக்கை உண்டாகிறது. ஆனுல் சட்டமின்றியே சூழ்நிலையை உருவாக்கும், ஒவ்வொருவரையும் பூமிதானம் செய்யச் செய்யும் இவ்வேலையை நாம் செய்தே ஆகவேண்டும். இதனுல் மிக்க நன்மையுண்டு.

## 2. பூமிதான யக்ஞம் எப்பொழுது வெற்றிபெறும் ?

ஐ : தங்கள் பணி நிறைவேறுவதற்கு எவ்வளவு காலமாகும் ?

வி : வெற்றியை இருவகையில் அளக்கலாம். ஒன்று நாம் வெற்றிக்கு எவ்வளவு அருகே போயிருக்கிரேம் என்பதைப் பார்ப்பது. மற்றது, நாம் எதை

வெற்றியென்று கொள்ளுகிறோம் என்பது. அப்படியானால் என் தகுதிக்கு அதிகமாகவே எனக்குப் பயன் கிடைத்துக் கொண்டிருக்கிறது, இனியும் கிடைக்குமென்று தோன்றுகிறது. இதைத் தொடங்கியபொழுது ஒரு வருஷத்தில் லட்சம் ஏக்கர் வீதம் நிலம் கிடைக்குமென்று எண்ணினேன். என் அந்த ஊகம் சரியாகத் தானிருந்தது. இப்பொழுதோ ஒரு பெரும்பணி எனக்கு ஏற்பட்டுவிட்டது. சேவாபுரியில் நாட்டின் ஊழியர்களனைவரும் அடுத்த இரண்டு வருஷங்களுக்குள் 25 லட்சம் ஏக்கர் சேர்ப்பதென்று உறுதி பூண்டார்கள். நான் செல்லுமிடங்களிலெல்லாம் மக்களிடையே மேன்மேலும் உற்சாகம் வளர்ந்து வருவதைக் காண்கிறேன். எல்லோருமே தேர்தலில் மூழ்கியிருந்த காலத்திலும் நம் வேலை நன்றாகவே நடந்து வந்தது. இப்பொழுதோ ஆதரவும் பெருகியிருக்கிறது, தேவையும் அதிகமாகியிருக்கிறது. நான் இதை 'சமுதாயப் புரட்சி வழியில் ஒரு மாதிரிச் சோதனை' என்று கருதுகிறேன்.

முன்பெல்லாம் 'உங்களது இவ்வேலை பூர்த்தியாக எவ்வளவு காலமாகு'மென்று என்னைக் கேட்டபொழுது நான் 500 வருஷமாகுமென்று சொல்லி வந்தேன். முதல் வருஷத்தின் வசூல் கணக்குப்படி நம் இலட்சியம் ஈடேற 500 வருஷங்கள் ஆகவேண்டும். ஆயினும் நாம் வேலையைத் தொடர்ந்து நடத்தி வந்தோம். 500 வருஷம் நாமெங்கே இருக்கப் போகிறோம் என்ற எண்ணமே நமக்கில்லை. இப்பொழுது கேட்போருக்கு 50 வருஷத்தில் இவ்வேலை முடியுமென்று சொல்லி வருகிறேன். ஏனெனில் இப்பொழுது வேகம் பத்து மடங்கு கூடியிருக்கிறது. ஆனால் நல்லெண்ணங்களை இடையறாது பரப்பியும் சிந்தித்தும் வருவோமானால் மூன்றும் வருஷத்திலேயே வேலையின் வேகம் இன்னும் பத்து மடங்கு பெருகுமென்பது என் நம்பிக்கை. இதெல்லாம் நல்லெண்ணத்தின் மகிமை.

நீங்கள் உற்சாகம் இழக்கத் தேவையில்லை. உலகில் நம்மை எதிர்ப்போர் இருக்கிறார்கள் என்று எண்ணலாகாது. எதிர்ப்புச் சக்திகள் உளுத்துப் போனவை, உயிரற்றவை. அவை தவறான எண்ணங்கள், தவறான சக்திகள். தவறான எண்ணத்திற்கு எவ்வளவு தான் ஊரில் மதிப்பிருந்த போதிலும் உயிர் கிடையாது. 'விரைவில் அதன் உண்மைத் தன்மை விளங்கிவிடும். ஆகையால் ஒரு கணத்தில் அது மடியும், அதை அழிப்பதில் சிரமமே இராது' என்ற வகையில் யோசிக்க வேண்டும்.

இந்தியா முழுவதிலும் இரண்டே வருஷங்களுக்குள் 12 லட்சம் ஏக்கருக்கு அதிக நிலம் தானம் கிடைத்திருக்கிறது. உலக சரித்திரத்திலேயே இவ்வாறு எங்கும் நடந்ததில்லை. அன்பாக விஷயத்தை அறிவுறுத்துவதனால் மக்கள் தாமே முன்வந்து தம் நிலத்தின் ஒரு பகுதியைப் பிறருக்கு அளித்தல், ஏழைகளைத் தம் உறவினராகக் கொண்டு கொடுத்தல் என்பது முற்றிலும் புதிய விஷயம். மக்கள் இதை ஏற்றுக் கொண்டிருப்பது ஒரு அற்புத நிகழ்ச்சியே.

மழை பெய்யாமல் பூமி காய்ந்தால் காய்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் மழை பொழியத் தொடங்கி விட்டாலோ நாடெங்கும் பொழிகிறது, ஒவ்வொரு கிராமமாகப் பொழிந்து கொண்டு போவதில்லை. இவ்வாறு ஒன்றின்பின் ஒன்றாய்ப் பெய்து நாடெங்கும் பெய்வதற்குப் பல வருஷங்கள் ஆகும். இதே போல பூமிதானத் தத்துவமும் மக்கள் உள்ளத்தை ஆட்கொண்டு எங்கும் வேகமாகப் பரவி வருவதால் இப் பிரச்னை தீருவதற்கு அதிகக் காலமாகாது.

## 3. சமூகப் புரட்சி

ஐ: 'பூமிதான யக்ஞம் சமுதாயப் புரட்சி வழியில் ஒரு மாதிரிச் சோதனை' என்று நீங்கள் கூறியதன் கருத்தென்ன?

வி: வருங்காலத்தில் நடக்கப்போவது எனக்கு இன்றே தெரிய வருகிறது. கவனித்துப் பார்ப்பவர் எவருக்கும் இது தெரியவரும். ஆனால் குருடன் தேடினால் தூணில் தான் போய் முட்டிக் கொள்வான். பூமி தானக் கருத்தை ஏற்பது மக்களுக்குச் சிரமமாயில்லை; அவர்கள் அதை விரைவாய் ஏற்கிறார்கள். பொதுஜன அபிப்பிராயம் தயாராகி விடும் பொழுது, அதாவது இப் பூமிதான விஷயத்தை நிலமுள்ளவர்களும் ஆதரிக்கத் தொடங்கி விடும்பொழுது சட்டமோ அல்லது புரட்சியோ, இரண்டுமோ வந்து விடுமாகையால் எப் பிரஜையினாலும் இதை எதிர்க்க இயலாது. இன்றோ இடது சாரியைச் சேர்ந்தவர்கள், வலது சாரியிலுள்ளவர்கள், நடுநிலைமையிலுள்ளவர்கள் ஆகிய எல்லோருமே என்னை ஆதரிக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்தை வினியோகிப்பதில் தான் ஐயமிருக்கிறது. ஐதராபாத் ராஜ்யத்தில் இப்பொழுது நில வினியோகம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அங்கிருந்து ஒரு புகார் கூட வரவில்லை. கருத்தைச் சிருஷ்டிப்பதற்கும் இலக்கியத்தை உருவாக்குவதற்கும் அதிக வேற்றுமையில்லை. அதே போன்று இலக்கியத்தைப் புனைவதற்கும் சத்தியத்தை உருவாக்குவதற்கும் அதிக வேறுபாடு இல்லை. ஏனெனில் கருத்து முதலில் மனத்தில் உதிக்கிறது; பின் வாக்கின் வழியே வெளியாகிறது. பிறகு அதுவே செயலாக மாறுகிறது. நிலம் பற்றிய கருத்தும் இப்படியேதான்; இன்று அது உள்ளவர்களிடமே இனியும் இருக்கவேண்டும் என்பதானால் அதை ஒருவர் ஏன் விடுவார்? பாருங்கள், இன்று நிலைமையே மாறிக்கொண்டிருக்கிறது. நிலமே

இன்று தான் இருக்குமிடத்தில் இனி இருக்க விரும்ப வில்லை. அது தன் உண்மை உரிமையாளரிடம் போக விரும்புகிறது. அது தானே நிலமில்லாதவர்களிடம் போவேன், போவேனென்று துடித்துக் கொண்டிருக் கிறது. இவ்வாறு இல்லையேல் என் பாஷை கூடப் புரியாத தெலுங்கானு போன்ற பகுதியில் எனக்கு நிலம் கிடைப்பானேன்? என்னை 'நிலம் கேள்' என்று ஏவு கிறவன் நிலமுள்ளவர்களைக் 'கொடு' என்றும் ஏவு வதை நான் காண்கிறேன். இப்பொழுது சூழ்நிலையே மிகவும் அனுகூலமாகி யிருப்பதால் மாரி காலத்தில் வெள்ளம் பெருகுவதைப் போல் இவ்வியக்கம் பெருகி வருகிறது. இதனாலேயே நிலமே இன்றைய உடைமை யாளர்களிடம் இருக்க விரும்பவில்லை, தன்னை உழுது பயிரிடுவதற்குத் தகுதியுள்ளவர்களிடம் போய்ச் சேர விரும்புகிறது என்கிறேன்.

## 4. எவ்வளவு காலமாகும்?

ஐ: நிலமில்லாதவர்களுக்கு நிலம் கிடைக்க எவ் வளவு காலமாகும்? அவர்களின் துயரம் எப்பொழுது தீரும்?

வி: புத்தபகவான் அவதரித்து மக்களின் துயரைத் தீர்க்க முயன்றார். அவரது முயற்சிக்குப் பிறகும் உலகில் துயரம் இருந்து வந்தது. நான் பிரச்னை எதை யும் தீர்ப்பதற்குக் கிளம்பவில்லை. இதற்கிடையில் என் பிரச்னையையே, என் கதையையே பத்திரிகைக்காரர்கள் 'வினோபாவின் கதை முற்றுப் பெற்றுவிட்டது' என்று எழுத நேர்ந்தாலும் நேரலாம். ஆகையால் இதெல்லாம் நடப்பது நமது புருஷார்த்தத்தை, வேலைத்திறனைப் பொறுத்திருக்கிறது. ஆற்றின் பாலத்தினிடம் இரு கரையிலுள்ளவர்களுக்கும் நம்பிக்கையிருப்பதைப்போல் நிலம் கோரக் கிளம்புகிறவர்களிடம் இரு தரப்பின

ருக்கும், நம்பிக்கையும் மதிப்பும் இருக்கவேண்டும். இம் மனிதர் இருவருக்கும் வேண்டியவர், இருவருக்கும் நன்மை செய்தலே இவர் நோக்கம்; கொடுப்பவருக்கும், பெறுவோருக்கும் நன்மை செய்யவே இவர் விரும்புகிறுர் என்பதை மக்கள் கண்டு கொள்ளுவார்களாஞல் அவர் கள் கொடுப்பார்கள், அளவு சங்கியையின்றிக் கொடுப் பார்கள். இன்றைய வாங்கும், பறிக்கும் சூழ்நிலையை மாற்றி, அளிக்கும் சூழ்நிலையைத் தோற்றுவித்தலே நம் அடிப்படைக் காரியம். இதிலிருந்து புரட்சிகரமான விளைவுகள் தோன்றுவதற்குப் பெரிதும் இடமிருக்கிறது.

## 5. ஹிம்சையா, அஹிம்சையா ?

ஐ: நிலம் போன்ற பெரும் பிரச்னே போரும் சமாதானமுமின்றித் தீருமா ?

வி: போர்களிஞல் தீராத பெரிய காரியத்தை புத்தர், ஏசுநாதர், இராமானுஜர் முதலிய மகான் களும் தீர்த்திருக்கிறுர்கள். இவ்வேலேயும் அவர்களின் முறையிலேயே நிறைவேறும்.

## 6. நிலத்தைத் துண்டாடுதல்

ஐ: ‘பூமிதான யக்ஞத்தின் விளைவாக நிலம் துண்டாடப்பட்டு விடும்’; அதஞல் பொருளாதார நோக்குடன் பார்க்கையில் அத்துண்டுகள் அவற்றைப் பெறுவோருக்குப் போதாதாகையால் அதஞல் தீமையே விளையும்’ என்கிறுர்களே, இது பற்றி உங்கள் கருத்தென்ன ?

வி: ஐந்து கோடி ஏக்கர் கைமாறுமாஞல், நிலமில் லாதவர் கைக்கு வருமாஞல் அது ஒரு மாபெரும் புரட்சி யாகும். அதனுடன் ஒப்பிடும்பொழுது இந்தத் துண்

டாடப்படுதல் என்பது சாதாரண விஷயம். உண்மையில் இக் கேள்வியே அர்த்தமில்லாத கேள்வி. இன்று சீனத்தில் கம்யூனிஸ்டுகளின் ஆட்சி நடக்கிறது. ஆனால் அங்கே அவர்கள் நிலத்தைத் துண்டாடும் முறையை ஏற்றே காரியம் செய்கிறார்கள்; விவசாயிகளுக்கு நிலத்தின் சிறு துண்டுகளே கொடுத்து வருகிறார்கள். இச் சிறு துண்டுகள் உள்ளவர்களிடையே பின்னர் பல விஷயங்களில் கூட்டு முறையில் காரியம் நடைபெறலாம். உதாரணமாக ஐந்து, பத்துக் குடும்பங்கள் சேர்ந்து பொதுவில் உழவு மாடுகள் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் தனித்தனியே நிலத்தைக் காவல் காப்பதை விடுத்து, பலர் சேர்ந்து பொதுவாக நிலத்திற்குக் காவல் போடலாம். இதோடுகூட கிராமக் கைத் தொழில்கள் நடத்தும் திட்டமும் இருப்பதால் இதிலும் கூட்டுமுயற்சி பயனளிக்கும்.

ஆனால் நான் இங்கே பல ஜில்லாக்களில் கிராமம் கிராமமாய்ச் சுற்றினேனே, அங்கே நான் விவசாயிகளைக் கேட்டதில் அவர்கள் தம்மிடம் ஐந்து 'பீகா' நிலமிருந்தால் தங்கள் நிர்வாகத்திற்குப் போதுமென்று சொன்னார்கள். இங்கேயுள்ளது இவ்வளவு குறைந்த நிலமே. ஆகவே பொருளாதார முறையில் 'போதிய நிலம்' (Economic holding) என்பது ஒரு நிரந்தரமான அளவைக் குறிப்பதல்ல. அதன் அளவு இடத்திற் கேற்ப மாறுகிறது. மத்திய பிரதேசத்தில் ஒரு ஜோடி மாடு இருபது ஏக்கர்வரை உழுது விடுகிறது. ஆகையால் ஒருக்கால் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவரான ஸ்ரீ பாட்டீல் ஒவ்வொருவருக்கும் குறைந்தது இருபது ஏக்கர் நிலம் வேண்டுமென்று சொல்லலாம். ஆனால் உங்கள் உத்தரப் பிரதேச அரசாங்கமோ $6\frac{1}{4}$ ஏக்கர் நிலம் போதுமானதென்று ஒப்புக்கொண்டிருக்கிறது. நானும் 5 ஏக்கருக்குப் பதிலாக $6\frac{1}{4}$ ஏக்கர் அளிப்பதை ஆட்சேபிக்கவில்லை. நிலம் கொணர்ந்து கொடுப்பவர்கள்

நீங்கள். அதிக நிலம் கொண்டுவந்தீர்களானல் அதிகம் கொடுக்கவும் படும். போதும் போதாது என்பதெல் லாம் நகர வாசிகளின், லக்னௌ வாசிகளின் கருத்துப் படி அல்ல, கிராமத்தவரின் கருத்துப்படியே நிர்ணயிக்கப் படும்.

'போதிய நிலம்' பற்றிப் பேசுகையில் நாம் நாட் டின் நிலையை மறப்பதற்கில்லை. இங்கேயுள்ள நிலம் மிகவும் குறைவு. ஆகையால் நாம் செய்யவேண்டுவது ஒவ்வொருவரும் பெறக்கூடிய நிலத்தின் அளவைப் பெருக்குவதல்ல, உள்ள சிறிய நிலத்திலிருந்தே அதிக விளைவை உண்டாக்கப் பார்ப்பதாகும். சீனத்திலும் ஜப்பானிலும் விவசாயிகளுக்குள்ள நிலத்தின் அளவு மிகவும் குறைவே.

மாடுகள் கட்டி உழும்பொழுது 15-20 ஏக்கர் நிலம் போதுமானதென்று கருதப்பட்டாலும் 'டிராக்டர்' என்ற இயந்திரசாதனம் கொண்டு உழுவதற்கோ 500 ஏக்கர் வேண்டியிருக்கும். அதாவது கையாலேயே கொத் திச் செய்யப்படும் விவசாயத்திற்கு ஓரளவு நிலம் வேண்டுமென்ருல் மாடுகொண்டு உழுவதற்கு இன்னும் அதிக நிலமும், டிராக்டர் கொண்டு உழுவதற்கு இன் னும் அதிகமும் வேண்டியிருக்கிறது. இவற்றில் எதை நாம் பொதுவான குறைந்தபட்ச அளவென்று கொள் வது? ஆகையால் இம்மூன்று அளவையையும் விட்டு விடுங்கள். ஒரு குடும்பத்திற்குத் தேவையான நிலம் எவ் வளவு என்று முடிவுசெய்து அதன்படி வினியோகியுங் கள் என்று நான் சொல்லுகிறேன். பிறகு எங்கே எவ்வளவு கூட்டுறவு தேவையோ அதைச் செய்து கொள்ளுங்கள். சிலர் பூரணக் கூட்டுறவு பற்றிப் பேசு கிருர்கள். நாட்டின் தற்பொழுதைய நிலையில் அது உடனே சாத்தியமல்ல. ஆனல் சில காரியங்களைக் கூட்டுறவு முறையில் செய்யலாம். அதாவது, நான்கு குடும்பங்கள் சேர்ந்து பொதுவில் ஒரு ஜோடி மாடு

வைத்துக்கொள்ளலாம் ; இரவில் விழித்துக் காவல் காக்க லாம் ; நிலங்களுக்கு நீர் பாய்ச்சலாம். இம்மாதிரி யெல்லாம் இப்பொழுதே சில கிராமங்களில் நடந்துதான் வருகிறது. நிலமில்லாதவர் ஒவ்வொருவருக்கும் நில மளித்தல் என்பது நம் திட்டமல்ல. வேறு பிழைப்புக்கு வழியில்லாது இன்றும் நிலத்தில் கூலிவேலை செய்தே பிழைப்பவரும், விவசாயம் நன்கு தெரிந்தவருமாயுள்ள வருக்கே நாம் நிலமளிக்கிறோம். சிறிய துண்டு நிலத்தில் விளைவு குறைகிறது, விளைச்சலைப் பெருக்குவதற்கு நிலம் அதிகமாயிருக்க வேண்டுமென்ற ஆட்சேபணை வேறு சொல்லப்படுகிறது. ஆனால் பரந்தாம ஆசிரமத் தில் நாங்கள் கையினாலேயே செய்த விவசாயச் சோதனை இந்த ஆட்சேபணை ஆதாரமற்றது என்பதை நிரூபித் திருக்கிறது. பிற இடங்களில் இதே முறையில் நடந்த சோதனைகளும் பரந்தாமத்தில் நாங்கள் கண்ட முடிவை உறுதி செய்கின்றன.

## 7. மட்ட நிலமும் ஒப்புக்கு அளிக்கப்படும் நிலமும்

ஐ : உங்களுக்கு மக்கள் சிரத்தையுடனேயே நிலம் தருகிறார்கள். ஆனால் நல்ல நிலங்களோடுகூட காடு மேடுகளும், பயிர் செய்யத் தகுதியில்லாத தரிசு நிலங்களும் கிடைக்கத்தான் செய்யும் ; வழக்கிலுள்ள நிலங்களையும் சிலர் கொடுக்கலாம் ; அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தினாலும் சிலர் கொடுக்கக்கூடுமே !

வி : முதல் கேள்விக்கு விடை 'நான் சமுத்திரம்' என்பது. சமுத்திரம் தன்னிடம் வந்து கலக்கும் எந்த நீரையும் ஏற்க மறுப்பதில்லை. அது கங்கையாயிருந்தா லும், சாக்கடையாயிருந்தாலும் சேர்த்துக் கொள்ளு கிறது. நான்தான் நிலம் முழுமையும் என்னுடைய

தென்று சொல்லி யிருக்கிறேனே. அது மட்டமாயிருந்தாலும்—பகவான் கூனியான தாசியையும் ஏற்று அவளையும் கரையேற்றியதுபோல்—நாம் அதையும் திருத்திச் செம்மையாக்கி விடுவோம்.

வழக்கிலுள்ள நிலம் கிடைத்தால் அதன் பொருள் வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரர் வழக்கிலிருந்து விலகிக்கொண்டதாகி விட்டதல்லவா? அப்பொழுது நாம் இன்னொரு கட்சிக்காரருடன் பேசி முடிவு செய்து கொள்வோம். அவருக்கே நிலம் தேவையானால் அவருக்குக் கொடுப்போம். இல்லையேல் அவரிடமும் தானம் கேட்டு வாங்குவோம். இவ்வகையில் சண்டை எப்படியோ தீருகிறதே, இது பெரிய இலாபமல்லவா ?

நிர்ப்பந்தம் எனப்பட்டது. எவரும் நிர்ப்பந்திக்க முடியாது. அதற்கு வேண்டிய அதிகாரம் இன்று எவரிடமும் இல்லை. ஆயினும் எவரேனும் நிர்ப்பந்தம் காரணமாக நிலம் அளித்ததாய் எனக்குத் தெரியவந்தால் அவரது சம்பந்தப்பட்ட தான பத்திரத்தை நான் கிழித்துப் போட்டுவிடுவேன்.

ஆனால் அரசாங்க அதிகாரிகள்தான் நிர்ப்பந்தம் செய்வார்களென்ற எண்ணமே தவறு. நீங்களும் நானும் கூட நிர்ப்பந்தம் செய்யலாம். ஆனால் நிர்ப்பந்தத்தின் மூலம் காரியத்தை நிறைவேற்றுவதெனில் நான் இதையெல்லாம் ஏன் செய்கிறேன் ? நிர்ப்பந்தம் செய்வதற்கென்று உலகில் எத்தனையோ சூர வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் நிர்ப்பந்தம் செய்யமுடியும். ஆனால் நியாய முறையில் வற்புறுத்துவதே கூடாதென்றால் உலகில் நல்லோர்—பெரியோருக்கு வேலையே இல்லாதுபோகும். நம் நாட்டுப் பெரியோரிடம் எனக்குள்ள குறை, அவர்கள் நிர்ப்பந்தமே செய்வதில்லை, அக்கிரமத்தை எதிர்த்து நிற்பதில்லை என்பது. இவ்வாறு எதிர்க்காதிருத்தல் சத்துவ குணமல்ல, தமோ குணமே.

எவரேனும் லஜ்ஜையினுல், லோக அபவாதத்திற்குப் பயந்து தானமளித்தால் நான் அவர்கள் அளிப்பதையும் ஏற்றுக்கொள்வேனென்று சொல்லியிருக்கிறேன். ஏனெனில், சிரத்தையோடு கொடுத்தாலும் சரி, சிரத்தையில்லாது கொடுத்தாலும் சரி கொடுக்கவேண்டியதே என்று சாத்திரம் கூறுவதால் கொடுத்ததை வாங்கிக் கொள்வதிலும் தவறில்லை.

இதைத்தவிர இப்பொழுது பாழாய்க் கிடக்கும் தரிசு நிலங்களையும் நாம் பண்படுத்திப் பயனளிக்கச் செய்வோம். இதற்காகத்தானே நாம் பூதானத்துடன், பூதானத்தின்பொருட்டே உழைப்புத்தானம், எருது தானம், கிணறு தானம், உர தானம் ஆகியவையும் பெற்று வருகிருேம். ஆனுல் இதில் முக்கியமாயுள்ள விஷயம் வேறு. நமக்கு எல்லாவகை நிலமும் தேவை. விவசாயத்திற்கும் நிலம் வேண்டும், மேய்ச்சலுக்கும் நிலம் வேண்டும். கிடைக்கும் நிலம் எதற்குப் பயன் படுமோ அதற்கு உபயோகிக்கப்படும். ஆனுல் இதை விடப் பெரிய விஷயம் பூதான யக்ஞத்திற்கு அடிப்படையாயுள்ள தத்துவமாகும். நாம் ஒவ்வொருவரிடமிருந்தும் அவரிடமுள்ள முழு நிலத்தையும் பெற்று, அதைப் பொதுவுடைமையாக, எல்லோருக்கும் சொந்தமானதாகச் செய்துவிடவேண்டும். அவ்வாறு செய்கையில் நல்ல நிலம், மட்ட நிலம் என்ற பேச்சுக்கு இடமே இல்லை. எல்லா நிலங்களையும் ஒன்றுசேர்த்துவிடுகையில் நல்லது கெட்டது எல்லாம்தான் அதில் கலந்திருக்கும்.

பூதான யக்ஞத்தின்மூலம் மக்களின் மனம் புதிய வகையில் உருவாகிக் கொண்டிருக்கிறது, நியாயமான காரியங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டுவருகிறது. சமூகம் இழைக்கும் அநியாயத்தைப் பொறுப்பதில்லை, அதிலிருந்து விடுபட்டே தீருவது என்ற எண்ணம் மக்களுக்குத் தோன்

றியது போலவே, மிகவும் பிற்பட்டுள்ளவர்களின் நலனை முதலில் கவனிக்கவேண்டும் என்ற எண்ணமும் மக்கள் மனத்தில் தோன்றிவருகிறது. இதையே நான் 'பிரஜா சூய யக்ஞம்' என்றும், 'தர்ம சக்கர பிரவர்த்தன'மென்றும் 'வாயில்லாதவர்களின் விடை'யென்றும் அழைத்திருக்கிறேன். இவற்றிற்குள்ள மதிப்புடன் ஒப்பிடுகையில் நிலப் பிரச்னையைத் தீர்க்கிறோம் என்பதற்கு நான் அவ்வளவு மதிப்பளிக்கவில்லை. இப்பொழுது எங்கும் வீசிவரும் இப் புதிய காற்றிலுள்ள சக்தி எல்லோரையும் தீண்டிவிடுமானால் நிலப்பிரச்னை தீருவதோடு நில்லாது, அதனால் சமூகத்தின் எல்லாப் பிரச்னைகளுமே தீர்க்கப்பட்டுப்போம். ஏனெனில், சமூகத்தில் தோன்றியுள்ள சிக்கல்களுக்கெல்லாம் மூலகாரணமான தீய போக்கையே இது களைந்தெறிந்துவிடும்.

## 8. கூட்டு விவசாயமும் திட்டக்கமிஷனும்

**ஐ : கூட்டு விவசாயம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? திட்டக் கமிஷனின் கருத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?**

**வி :** கூட்டு விவசாயம் பற்றி நான் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு நகரத்திலும் இக் கேள்வி கேட்கப்படுகிறது; ஆகையால் அதற்கு விடையளிக்க வேண்டியிருக்கிறது. விஷயமென்னவென்றால், நான் இது பற்றி பூமியில் காலை ஊன்றிக் கொண்டு சிந்திக்கிறேனே யல்லாது காற்றில் பறந்தபடி சிந்திக்கவில்லை. அதாவது, எது காரிய சாத்தியம் என்பதைக் கவனத்தில் கொண்டே நான் இது விஷயத்தில் ஆலோசிக்கிறேன். இந்தியாவின் இன்றைய நிலையில் நாம் உருப்படியாக எதையேனும் செய்ய வேண்டுமென்றால், ஏழை எளியோருக்கு உதவியளிக்க வேண்டுமென்றால் வெறும் பேச்சு ஆடம்பரத்தில் மயங்கக்

கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம். நம் நாடு விவசாயத்தை முக்கியமாய்க் கொண்டது. இங்கே குறைந்தது பத்தாயிரம் ஆண்டுகளாக விவசாயம் நடந்து வருகிறது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இதனுல் இந்நாட்டு மக்களின் சுபாவமே ஒரு தனி முறையில் உருவாகியிருக்கிறது.

இத்தகைய நிலையைக் கருத்தில் கொண்டு நான் சொல்லுவது: இப்பொழுதைக்கு நிலம் சிறுசிறு துண்டுகளாகவே இருக்கட்டும்; அவைகளில் குடும்பங் களிலுள்ளவர்கள் தம் முழுச் சக்தியையும் ஈடுபடுத்திப் பாடுபடட்டும்; இந்நிலங்களுக்கு வேண்டிய தண்ணீருக்கு நல்ல ஏற்பாடு செய்து, கூடியவரை அதிக விளைவு உண் டாக்கப் பார்க்கலாம். இவைகளே காரிய சாத்திய மானவை, பயன் தரக் கூடியவை.

சிறிய துண்டுகளென்ருல் அவற்றின் அளவுக்கும் வரம்பு கட்டாயம் இருக்கும். நான் சராசரி ஐந்து ஏக்கர் என்று கொண்டிருக்கிறேன். இது சிறிது கூடியோ குறைவாகவோ இருக்கலாம். உத்தரப் பிரதேச அர சாங்கம் $6\frac{1}{4}$ ஏக்கர் என்று கொண்டிருக்கிறதே என்ருல் அதற்கும் நான் சொல்வதற்கும் அதிக வித்தியாச மில்லை.

இவ்வளவு வித்தியாசம் இருப்பதற்கும் காரணம், அரசாங்கம் லக்னௌவிலிருந்தபடி இது பற்றிச் சிந்திக்க, நான் கிராமங்களில் சுற்றியபடியே யோசிப் பதுதான். விவசாயத்திற்கு வேண்டிய உழவு மாடுகள், தண்ணீர், காவல் முதலிய சாதனங்கள் விஷயத்தில் கூட்டு முறையை அனுசரிக்கலாம். இம்மாதிரியான கூட்டு முறையை கிராம மக்கள் ஏற்கெனவே அனு சரித்தே வருகிருர்கள். ஆனுல் இன்று முறைப்படி, ஒழுங்காய் இல்லாத இதை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும். நான் கடிகாரப்படி மணிக்கணக்காய் வேலை செய்து, மாடுகளைப் போல் விளைவைப் பார்த்துக்

கொண்டுமட்டும் இருந்து அதை அனுபவிப்பதற்குச் சிறிதும் உரிமையில்லாத விவசாயக் கூலிகளைக் கொண்ட பெரிய பெரிய 'எஸ்டேட்டு'களைப் பார்த்திருக்கிறேன். அவற்றில் கூலியாட்களும், உழவு மாடுகளும் ஒரே வகை யில் பாடுபடுகின்றன. வயிற்றுக்குப் போடவில்லையென் ருல் வேலை செய்ய முடியாதாகையால் இரண்டிற்கும் ஒரே வகையில் உணவு அளிக்கப்படுகிறது. ஆனால் இரண் டின் அறிவு வளர்ச்சியும் உள்ள மகிழ்ச்சியும் ஒரே மாதிரிதான் இருக்கின்றன. கூலிவேலை செய்வோரை (ஆங்கிலத்தில்) வெறும் 'கைகள்' என்றும் மற்றவர்களை 'தலைகள்' என்றும் கருதப்படும் இடத்தில் சமூகத்தின் உடல் துண்டாடவேபடும். சிலரைக் கைகளாகவும், சிலரைத் தலைகளாகவும், அதாவது மக்களை ராகு-கேதுக் களாக பகவான் சிருஷ்டிக்கவில்லை என்பதை நாம் கருத் தில் கொண்டு வேலை செய்ய வேண்டும். இல்லையேல் ஏற்கெனவே இருந்த தேவதைள் இப்பொழுது மறைந்து போயிருந்தும் புதிய 'மானேஜர்' தெய்வங்கள் தோன்றுவதென்றால் அது நமக்குப் பேராபத்தாகவே முடியும். யுக்தியாகவும், முறைப்படியும் செய்தால் கூட்டுறவு பற்றிய சோதனை வெற்றிபெறும் என்றே நான் நம்புகிறேன். கூட்டுறவு முறையினாலன்றி இந்தியா கடைத்தேறுவதற்கில்லை. சிறிய மனிதர்கள் ஒன்று கூடி வேலை செய்தாலல்லது உலகில் அவர் களால் நிலைக்க வியலாது என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஒன்று சேராமற் போனால் நிலம் பல வகையில் பாழ்படும், விளைவும் குறையும். நான் இதை யெல்லாம் ஒப்புக்கொண்ட போதிலும் இது வரையில் நில உடைமையையே அறியாத, இம்முறைகளில் பழக் கமே யில்லாத, கணக்கு வழக்கே தெரியாத மக்கள் மீது நீங்கள் இதையெல்லாம் கொண்டு வந்து சுமத்தி, பின் இவர்களுக்குப் புத்தியில்லை என்று குறை கூறுதல் நியா யமா என்று நான் உங்களைக் கேட்கிறேன். ஆகையால்

நீங்கள் ஒரு நிர்வாக ஸ்தாபனம் அமைத்து என் திருப்திக்காக அதில் என் பெயரையும் சேர்த்து வைப்பீர்கள். இதன் பொருளென்ன? ஏழைகள் இறுதிவரை உங்களை அண்டியே இருக்க வேண்டியதாகி விடுகிறது. இவ்வேற்பாட்டை நான் இப்பொழுது விரும்பவில்லை.

## 9. 'ஸீலிங்' அல்லது நிலத்தின் அதிகப் பட்ச வரம்பு

**ஐ: 'ஸீலிங்' அல்லது ஒவ்வொரு மனிதனும் வைத்துக் கொள்ளக் கூடிய நிலத்தின் அதிகப்பட்ச வரம்பு பற்றி நீங்கள் கூறுவதென்ன?**

வி: இந்த அதிகப்பட்ச வரம்புப் பேச்சே ஆபத்தானது. நாம் இதைச் செய்யத் தேவையில்லை. நான் எனக்கு இந்த 'ஸீலிங்' அல்லது மச்சு வேண்டாம்-வெறுங் கூரையே போதுமென்று சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து ஏக்கர் அளிப்பது, அவ்வாறு அளித்தது போக எஞ்சுவதை இஷ்டம்போல் வினியோகிப்பது என்ற விதியை ஏற்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். சிலர் 'நீங்கள் கூறும் இந்தக் கூரையோடு நிற்பதென்ருல் அது மிகவும் தணிந்திருக்குமே; அப்பொழுது வீட்டினுள் குனிந்தல்லவா நுழைய வேண்டி வரும்?' என்கிருர்கள். நமக்குத் தேவையானது, தில்லி நகரிலுள்ள மாளிகைகளல்ல, கிராமத்துக் கூரைகளே. நான் ராஞ்சியில் முப்பது ஏக்கரை அதிகப்பட்ச வரம்பென்று கொண்டால் நிலமில்லாதவர்களுக்கு நிலமே கிடைக்காது என்பதை அறிந்தேன். அப்பொழுது நிலச்சுவான்தார்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடையே தம் நிலங்களைப் பகிர்ந்து கொண்டு விடுவார்கள். தெலுங்கானுவில் இந்த அதிகப்பட்ச வரம்பு அனுஷ்டானத்திற்கு வந்தபொழுதும் நிலச் சுவான்

தார்கள் இதைத்தான் செய்தார்கள். அங்கே 200 ஏக்கர் அதிகப் பட்ச வரம்பெனக் கொள்ளப்பட்டது. திட்டக் கமிஷன் கூறியுள்ளபடி 30 ஏக்கரை, அதாவது சிறிய அதிகப்பட்ச வரம்பை ஏற்பதென்ருல் நஷ்டஈடு அதிகம் கொடுக்க வேண்டியிருக்கும். இன்ருே நஷ்ட ஈடு தராமல் நிலத்தைப் பறிக்கவே முடியாது. அதிகப் பட்ச வரம்பை மிகவும் உயர்த்திஞலும் பயனில்லே. இத ஞலேயே கிராமத்தின் நிலம் முழுவதையும் கிராமத்தின் உடைமையாக்க நாம் விரும்புகிருேம். அதிகப் பட்சம் மூன்று மடங்கு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்ஞர்கள். ஆஞல் எல்லோருக்கும் வயிறு நிறைய உணவில்லே என்னும் பொழுது ஒருவருக்கு மட்டும் மூன்று பேருக்கு வேண்டிய உணவு பெறும் உரிமையை ஏன் அளிக்க வேண்டும்? எந்த மனிதஞலும் இன் ஞெருவனேப் போல மூன்று மடங்கு விவசாய வேலே செய்ய முடியாதென்ருல் அவனுக்கு மூன்றுமடங்கு நிலம் வைத்துக் கொள்வதற்கு மட்டும் எவ்வாறு உரிமை ஏற் படும்? ஆகையால் இவ்விவாதத்தில் சிறிதும் சார மிருப்பதாய் எனக்குத் தோன்றவில்லே. நாம் அடிப் படையான விஷயங்களேக் குறித்து யோசிக்க வேண்டும். கிராமத்தின் நிலம் கிராமத்தின் உடைமையாக வேண்டும். இதைச் சட்டத்தின்மூலம் அரசாங்கத்திஞல் செய்ய முடியுமா? அவ்வாறு செய்வதைத் தவிர வேறு மார்க்கமில்லே யென்று எவரும் இதுவரை தீர்மானம் நிறைவேற்றவில்லே; உங்களாலும் நிறைவேற்ற முடி யாது. இந்த அதிகப் பட்ச வரம்பிஞல் என்ன ஆகி விடும்? இன்றுள்ள பெரிய கொள்ளேக்காரர்கள் போய் விட, சிறிய திருடர்கள் தோன்றுவார்கள். அதன் விளே வாகப் பிறரைப் பறித்து வாழ்வோரின் கும்பலே பெருகும்.

தனவந்தர்கள் வைத்துக் கொள்ளக்கூடிய நிலத் திற்கு ஒரு வரம்பு கட்டிவிடுவோமென்று சொல்லப்படு

கிறது. அது 150 ஏக்கரென்றும் 200 என்றும், 250 என்றும் பலர் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள். சட்டத்தில் 200 ஏக்கரையே வரம்பாகக் கொள்ளப்படுமானால் 200 ஏக்கர் உள்ளவர்களிடமிருந்து எவரும் நிலதானம் பெற முடியாது. ஆனால் நானோ நூறு ஏக்கர்காரர்களிடமிருந்தும் 50, 40 ஏக்கருள்ளவர்களிடமிருந்தும்கூட நிலம் பெறுகிறேன். ஒரு கிராமத்தில் நிலச்சுவான்தார்கள் சிலர் என்னிடம் வந்தனர். நான் அவர்களிடம், 'இந்தப் புண்ணிய காரியத்தில் உங்களுக்குப் பங்கு வேண்டாமா?' என்று கேட்டேன். அக்கிராமத்தில் 20 ஏக்கர் உள்ளவர்களும் 3 ஏக்கர் நிலம் தந்தார்கள். எந்த அரசாங்கச் சட்டத்தினாலும் 20 ஏக்கர்காரர்களிடமிருந்து 3 ஏக்கர் பெறமுடியாது. ஆனால் உள்ளம் மாறும் பொழுது இதெல்லாம் சாத்தியமாகிறது.

## 10. நஷ்ட ஈடு

ஐ: நிலச்சுவான்தார்களுக்கு நஷ்டஈடு தரவேண்டுமா, வேண்டாமா?

வி: இப்பொழுதுள்ள சட்டம் அரசியல் நிர்மாணத்தில் கண்டுள்ளபடி நஷ்ட ஈடு கொடுத்து நிலம் பெறுவதையே அனுமதிக்கும். சட்டத்தில் இவ்வாறு இருப்பது சரியே. ஆனால் அஹிம்சை முறையிலோ நிலம் பெறுவோர் நஷ்ட ஈடு கொடுத்தே ஆகவேண்டும் என்பதில்லை. அஹிம்சை முறையில் கவனிக்க வேண்டியதோ, பெரிய, நடுத்தர, குட்டி நிலச்சுவான்தார்களின் ஜீவனமும் நடக்க வேண்டும், ஏழை எளியோருக்கு நியாயமும் வழங்கப்பட வேண்டும் என்பது. பத்தாயிரம் ஏக்கருள்ள ஒரு பெரிய மிட்டாதாருக்கு நஷ்ட ஈடு கொடுக்கவில்லையென்றால் அதை ஹிம்சையென்று சொல்வதற்கில்லை. நான் பலதரப்பட்ட நிலச்சுவான்தார்களுக்கும், 'நீங்கள் அளிக்கும் நிலத்திற்கு சல்லி விடாமல் கணக்

குப் பார்த்து நஷ்ட ஈடு பெறத் தேவையில்லை, உங்க ளுக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ளுங்கள். என்று சொல்லி அவர்களை இதை ஏற்குமாறு செய்து விடலாமென்று எண்ணுகிறேன். இதனால் நான் நஷ்ட ஈட்டையும் தானமாகப் பெற்று வருகிறேன்.

## 11. நிலம் அளிப்போர் யார்?

ஐ: உங்களுக்கு யார் யார் நிலம் அளிக்கிறார் கள்? சட்டத்தினாலோ நீங்கள் பெரிய நிலச்சுவான் தாரிடமிருந்தும் சுலபமாய் நிலம் பெற்று விடலாமே!

வி: நான் யாசகன், பிச்சை வாங்குகிறவன். நான் எல்லோரிடமும் கேட்கிறேன், அனைவரும் கொடுக்கலாம். எவரும் கொடுக்க வில்லை யென்றால் நான் வற்புறுத்தவும் விரும்பவில்லை. என்னிடம் அதிகார மெதுவுமில்லை. இவ்வாறு அதிகாரமில்லாமையே என்னிடமுள்ள பெரிய சக்தி யென்று நான் எண்ணுகிறேன். புத்த பகவானிடம் ராஜ்ய அதிகாரமிருந்தது, ஆனால் சில காரியங்களுக்கு அதிகார மிருப்பதே இடையூறுகிறது என்பதை உணர்ந்து அவர் அதைத் துறந்தார்.

நிலம் சேர்க்க வேண்டும், பெறவேண்டும் என்பது நமது முக்கிய நோக்கமல்ல. உலக நன்மையே, மக்களின் நன்மையே நமது முக்கிய நோக்கம். நமக்கு நிலம் அளிப்பவர்களே நம் தத்துவத்தைப் பிரசாரம் செய்வோ ராகி விடுகிறார்கள். இன்று அறியாமையினால், மோகத் தினால் நிலமளிக்க மறுப்போர் நாளை சட்டம் வரும் பொழுது கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த மேற்படும். இன்று அவர்கள் தத்துவத்தை ஏற்றால் நாளை வரும் சட்டத்தை அவர்கள் ஏற்பவர்கள் ஆவார்கள். நம் கருத்தைப் புரிந்துகொண்டு மக்கள் நிலம் தந்தால் நமக்கு நிலம் முழுமையும் கிடைத்தது போல் தான். அவ்வாறின்றி தம் சிரத்தையின், ஈடுபாட்டின் அறிகுறி

யாக இன்று சிறிதே அளிப்பினும் எஞ்சுவதைப் பின் கொடுத்துவிடுவார்கள். ஆகையால் நாம் செய்ய வேண்டுவது எல்லோருடைய அனுதாபத்தையும், ஆதரவையும் பெறுதலே.

## 12. 'தானம்' என்ற சொல் இழிவைக் குறிப்பதா?

**ஐ: 'பூமிதான யக்ஞம்' என்று நீங்கள் இதை அழைக்காமல் 'பூமி விநியோக யக்ஞம்' என்று அழைத்தாலென்ன? இந்த 'தானம்' என்ற சொல் இழிவைக் குறிக்கவில்லையா?**

**வி:** மிகவும் சிறந்த சொல்லும் தீயோர் கைக்கு வரும்பொழுது கெட்டுப் போகிறது. சாதாரணச் சொல்லும் நல்லவர் கையாண்டால் அழகு பெறுகிறது. யக்ஞம், தானம், தவம் என்ற இவை நம் பழைய சொற்கள். இவை நமக்கு கீதையிலிருந்து கிடைத்தவை. நாம் தானத்தை இழிவாய்க் கருதி, வைராக்கியத்தை அவமானமானதாய்க்கொண்டு, சந்நியாசத்தைத் தூஷிக்கத் தொடங்குவோமாயின் நல்ல சொற்களை யெல்லாம் இழக்க நேரும், வேறு சொற்களைத் தேட வேண்டிவரும். தேடினுல் கிடைக்குமா? கிடைக்கா. ஆகையால் நாம் நம் சாத்திரங்களிலுள்ள சொற் செல்வத்தை இழத்தல் கூடாது. அவற்றை மேலும் ஒளி பெற்று விளங்குமாறே செய்ய வேண்டும்.

மேலும் தானமென்ற சொல்லை நாம் சாஸ்திரீயப் பொருளிலேயே வழங்கி யிருக்கிறோம். சங்கராச்சாரியர் दानम् समविभाग: (தானம் ஸமவிபாவக:) தானமென்றால் நியாயமான பாகுபாடென்று சொல்லியிருக்கிறார். நாட்டில் ஒரு பொருளுக்குப் பற்றுக்குறை யிருக்கையில் அது நம்மிடம் அதிகமிருக்குமாயின் அதை நாட்டிற்கு

அளித்தல் நம் கடமை. கன்னிகையை கலியாணத்தில் அளிப்பவன் அதனுல் தான் ஏதோ பயன் பெறுவதாய்க் கருதியே அளிக்கிருன். அதேவகையில் பூமிதானம் அளிப் போரும் தாம் ஏதோ பேறு பெறுவதாய்க் கொண்டே அளித்தல் வேண்டும். நான் இதைப் பூமிதானத்திற்கு மட்டும் சொல்லவில்லை. உங்களிடமுள்ள எதைக் கொடுக்கையிலும் உங்களுக்கு இதே எண்ணம் இருத்தல் வேண்டும். வீணே வீட்டில் கிடக்கும் பொருள், அது பணமாயினும் சரி, வேறு என்னவாயினும் சரி மக்கி மடித்துப் பாழாகும். அது இருந்துகொண்டே யிருந் தால் சாபக் கேடாய்த்தான் முடியும். நம்மிடமுள்ள எதையும் அது தேவையாயுள்ளவரைப் பார்த்து, ‘இதை உடனே எடுத்துக் கொண்டு எனக்கு உதவுங்கள்’ என்றே நாம் சொல்ல வேண்டும்.

இவ்வாறு தானமென்ற சொல்லுக்கு ஏற்பட்டுள்ள பொருளை நாம் செப்பம் செய்ய, திருத்த விரும்பு கிறோம். சமூகத்திலுள்ள சிலர் அதற்குத் தவருன பொருள் ஏற்படுமாறு செய்திருந்தால் நாம் இனியும் அதை அவ்வாறே வழங்கச் செய்ய மாட்டோம். நாம் அதைக் கெடவிட்டால் நாம் தோல்வியுற்றதாகும். ஆனுல் நாம் தான் தோற்பதாயில்லையே! நாம் நம் ஆயுதத்தை ஒளி பெற்றுத் திகழுமாறே செய்வோம்.

## 13. மேய்ச்சல் புலம்

**ஐ: நில மனைத்தையும் உங்களிடம் அளித்து விட் டால் மேய்ச்சல் புலம் இல்லாது போய் விடுமே, கால் நடைகள் மேய்வதற்கு அப்பொழுது என்ன செய்வது ?**

வி: கேள்வி சரிதான். நீங்கள் சிறிது சிறிதாக ஏன் நிலம் தருகிறீர்கள்? மங்க ரோட்டில் செய்தது போல் கிராமத்தின் நிலம் முழுவதையும் ஏன் கொடுக்க வில்லை? கொடுத்துவிட்டு பின் நாங்கள் எவ்வாறு ஏற்பாடு

செய்கிரோம் என்பதைப் பாருங்களேன். மங்கரோட் வாசிகள் அனைவரும் தம் கிராமத்தை விட்டு வெளியே போகவேண்டி வந்ததா? அங்கே மேய்ச்சல் புலம் இல்லாமலா போய்விட்டது? கிராமம் முழுவதையும், நம்மிடமுள்ள நிலமனைத்தையும் பூதான யக்ஞத்திற்கு அளிக்கவே நாம் முயல வேண்டும்.

நீங்கள் கேட்டது மேய்ச்சல் புலத்தைப்பற்றி. இப்பொழுதைக்கு ஒரு கிராமத்தில் மேய்ச்சலுக்குள்ள நிலமே நமக்கு தானம் கிடைத்து, கிராமவாசிகள் அனைவரும் அதை மேய்ச்சலுக் கென்றே ஒதுக்கி வைக்க விரும்பினுல் அதை அவ்வாறு வைப்பதில் தடையெதுவுமில்லை. ஆனுல் நமது இறுதித் திட்டத்தில் மேய்ச்சல் தலை என்று ஒன்றை ஒதுக்கி வைப்பதற்கு ஏற்பாடில்லை. கிராமத்தின் நிலம் முழுவதும் உழுது பயிரிடப்பட வேண்டும். ஆடு மாடுகளுக்கும் இப் பயிர் நிலங்களிலிருந்தே திட்டப்படி ஒவ்வொரு நாளும் நல்ல புல் தழைகள் கிடைப்பதற்கு ஏற்பாடிருக்கும். இன்றே ஏதோ மனத் திருப்திக்காக மேய்ச்சல் புலம் இருப்பதாய்ச் சொல்லப்படுகிறதே யன்றி அவைகளில் கால் நடைகள் இரண்டு மூன்று மாதங்களுக்கு அதிகமாய் மேய்வதற்கு ஒன்றும் இருப்பதில்லை. ஆகையால் நாம் மனிதர்களின் உணவுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதைப் போலவே நம் கால்நடைச் செல்வத்தின் தீனிக்கும் தேவையான ஏற்பாடு செய்ய வேண்டும்.

## 14. நிலச்சுவான்தார்களிடம் வெறுப்பு

**ஐ : உங்கள் வேலையினுல் மக்களுக்கு நிலச்சுவான்தார்களிடம் வெறுப்புண்டாகிறது; ஏனெனில் உங்களுக்கு நிலம் அளிக்காவிட்டால் கம்யூனிஸ்டுகள் வந்து நிலத்தைப் பிடுங்கிக் கொள்ளுவார்கள் என்று அவர்கள் அஞ்சுகிருர்கள்.**

வி : இக் கேள்வி விசித்திரமானது. நம் வேலையினால் வெறுப்புணர்ச்சி ஏற்படுகிறதெனில் வெறுப்புண்டாக்காத காரியமே உலகத்தில் இல்லை யென்று சொல்ல வேண்டியது தான். நாம் கூடிய வரை அஹிம்சையை எப்பொழுதும் கருத்தில் கொண்டே பேசுகிறோம். கம்யூனிஸ்டுகள் வந்து நிலத்தைப் பறித்துக் கொள்ளுவார்களென்று நான் எண்ணவில்லை. ஏனெனில் அவர்களிடம் அதற்கு வேண்டிய சக்தி, பலம் இல்லை. ஆனால் நிலச்சுவான்தார்கள் காலத்தின் போக்கை யுணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்ளாவிடில் பிற தேசங்களில் கையாளப்பட்ட முறைகள் இங்கும் வரமாட்டா வென்று நான் நினைக்கவில்லை.

என் வேலையினால் எங்கும் அச்சம் எழுந்ததில்லை. அச்சம் பரவியிருக்குமானால் இன்று நமக்கு எல்லாக் கட்சிகளின் அனுதாபமும் ஆதரவும் கிடைத்து வருகிறதே, அது கிடைக்காது. மேலும், உங்கள் மாகாணத்திலோ கம்யூனிஸ்டுகள் எனக்கு மான (வரவேற்புப்) பத்திரம் அளித்ததோடு நில்லாது தானபத்திரங்களும் அளித்திருக்கிறார்கள்.

No. 109073

## 15. ஏழைகளிடமிருந்தும் தானமா ?

ஐ : நீங்கள் ஏழை எளியோரிடமிருந்தும் நிலம் பெறுவதனால் அவர்களை இன்னும் ஏழைகளாக்கவில்லையா ?

வி : ஆம். ஏனெனில் ஓர் ஏழை தன்னிலும் அதிக ஏழையின் பொருட்டு தியாகம் செய்தால் அதன் விளைவாக நாட்டில் தோன்றும் சக்தி செல்வவான்களையும் தட்டி எழுப்பாதிராது. அப்பொழுது செல்வவான்கள் தம்மிடம் அதிக நிலம் வைத்திருத்தல் சாத்தியமல்ல.

## 16. ஜனத்தொகையும் பூதானயக்ஞமும்

**ஐ : ஜனத்தொகை இப்பொழுதுபோல் பெருகிக் கொண்டே வருமானுல் இப்பொழுது குடும்பத்திற்கு ஐந்து ஏக்கர் வீதம் நிலம் வினியோகிப்பது எவ்வாறு போதுமானதாகும்? இந்தப் பூமிதான யக்ஞம் எது வரை நடக்கும்?**

வி : ஜனத்தொகை தொடர்ந்து பெருகிக்கொண்டே போனுல், மக்கள் தம் பிள்ளை குட்டிகளையே வெட்டிக் கறி சமைத்துத் தின்னத் தொடங்கிவிட்டால் அது குறித்து நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. அப்பொழுது எனக்கு வேலையிராது, கடவுளுக்குத்தான் வேலையிருக்கும். மற்றபடி யக்ஞத்திற்கு உள்ள தேவை எப்பொழுதும் இருந்துதான் வரும். இப்பொழுது பூமி தான யக்ஞம் தேவையென்ருல் பிற்காலத்தில் தொழில் தானயக்ஞம் தேவைப்படும். ஆனுல் உங்கள் ஐயத்தி லுள்ள கருத்து மக்கள் தொகை பெருகிக்கொண்டே இருக்கும் என்பது. அவ்வாறு இருந்தால் யுகப் பிரளயம் வருவதைத் தடுப்பதற்கில்லை என்பதே நான் அதற்குக் கூறும் விளக்கம். ஆனுல் மனிதன் அறிவுள்ள, சிந்தனு சக்தியுள்ள பிராணி. அவன் அனுபவத்திலிருந்து போதனை பெறுகிருன், பாடங்கற்கிருன். ஆகையால் காரியம் மிஞ்சிப் போவதற்குமுன் அவன் செய்ய வேண் டியதை அறிந்து செய்து அழிவினின்று தப்பிவிடுவான். இந்தியாவில் ஜனத்தொகை பெருகிவிட்டது என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஏனெனில் ஜாவா, சுமத்திரா முதலிய தேசங்களின் ஜனத்தொகை இங்கிருப் பதைவிட அதிகம். ஆயினும் தூரதிருஷ்டியுடன் இப் பிரச்னை குறித்து ஆலோசித்தல் அவசியம். இப்பிரச்

ஊக்கு பரிகாரம், மக்களுக்குத் தகுந்த கல்வி அளிப்பதி லுள்ளது. ஆற்றலுள்ள, திறமைமிக்க பிள்ளைகள் தோன்றுவதற்கு எது தேவையோ அது பிள்ளைகள் குறைவாய்ப் பிறப்பதற்கும் தேவை.

## 17. கம்யூனிசத்தின் நாற்றிசைப் பிரசாரமும் பூமிதானயக்ஞமும்

ஐ : நம் நாட்டின் நான்கு எல்லைகளிலும் கம்யூ னிசப் பிரசாரம் ஏற்கெனவே நடந்துள்ளது. இந் நிலையில் நம் சமூக அமைப்பு நிலைக்குமா என்ற சந் தேகம் தோன்றியிருக்கிறது. நீங்கள் இப் பூமிதான யக்ஞத்தையே தொடர்ந்து நடத்தப் போகிறீர்களா அல்லது வேறு வேலைத்திட்டமெதையேனும் இந்திய சமூக அமைப்பைப் பாதுகாப்பதற்கு நாட்டிற்கு அளிக்கப் போகிறீர்களா ?

வி : பூமிதானயக்ஞம் வெறும் வியாஜமே. மக்கள் உண்மையான ஒன்றையும் அது யுகதர்மம் என்ற வகை யில் அவர்கள் முன் தோன்றும்பொழுதே ஏற்பார்கள். மகான்கள் தம் வாழ்க்கையினுல் நமக்கு அஹிம்சையைப் போதித்து வந்திருக்கிருர்கள். ஆனுல் அதைப் பின் பற்றி நடந்தவர் எத்தனை பேர் ? ஆனுல் காந்தியடிகள் ஒரு பெரிய பிரச்னையுடன் அஹிம்சையை இணைத்து விடவே பலர் அதை அனுஷ்டிப்பதில் கலந்து கொண் டார்கள். ஏனெனில் அஹிம்சை இன்றி சுயராஜ்யப் பிரச்னை தீருவதாயில்லை. அவ்வாறே நாம் இப்பூமிப் பிரச்னையின் மூலமாக லோகசக்தியை, ஜனசக்தியை வெளியிடுவோமாயின் அதனுல் சமூகத்தில் நல்ல விளைவே ஏற்படும். ஓர் ஆங்கிலச் சொல்லை நான் கையாளலா மென்ருல் நான் இதை Exploit என்பேன். ஆங்கில பாஷையில் இச்சொல்லை நல்ல பொருளிலும் உபயோகிக்

கலாம். இவ்வாறு இவ்விடத்திய சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பு, அரசியல் அமைப்பு ஆகிய மூன்றையும் மாற்றுவதற்கு இதை உபயோகிக்கலாம். நற்குண வளர்ச்சி என்பது மட்டுமென்றால் அது புத்தர் காலந்தொட்டே சொல்லப்பட்டு வருவதுதான். ஆனால் அதை வாழ்க்கைப் பிரச்னை ஒன்றுடன் இணைக்காத வரை சமுதாய வாழ்வில் அதை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது.

## 18. நிலத்திற்குத் தேவையான சாதனங்கள்

ஐ: ஏழைகளுக்கு நிலத்தை மட்டும் வினியோகித்து விட்டால் போதாதே; அவர்களுக்கு உழவு மாடு முதலிய சாதனங்களும் தேவையல்லவா? நீங்கள் அவைகளை எப்படித் தருவீர்கள்?

வி: நிலமளிப்பவர்கள் உழவுமாடும் அளிப்பார்கள். மக்களை பூதானம் தரத் தூண்டும் நல்லெண்ணம் உழவு மாடு தரவும், விதை தரவும் தூண்டும். கான்பூர் மக்கள் நான் அந்த ஜில்லாவில் அடி வைத்ததுமே தம் பங்குக்குள்ள 10,000 ஏக்கர் நிலம் அளித்துவிட்டார்கள். ஆனால் கான்பூர் பெரிய வியாபாரஸ்தலமல்லவா? நான் அந்த 10,000 ஏகர் நிலம் 2,000 குடும்பங்களுக்கு வினியோகிக்கப்படும் என்று கொண்டு அவ்விரண்டாயிரம் குடும்பங்களுக்குத் தேவையான 2,000 ஜோடி மாடுகளையும் கான்பூர் நகரவாசிகளிடமே கேட்க, அவர்கள் தரச் சம்மதித்தார்கள். விதை முதலியன தருவதிலோ அரசாங்கமும் உதவக் கூடும்.

## 19. தானமளிக்கும் எண்ணம் இன்று மக்களுக்கு இல்லையா ?

ஐ : 'மனிதன் கொடுக்க என்னவோ விரும்புகிருன் ! ஆனல் இக்காலமே கொடுப்பதற்கு அனுகூலமாய் இல்லை' என்பது சரியா ?

வி : இப்பொழுது இல்லையென்றல் முன்பு இருந்ததா ? எப்பொழுதுமே மனிதன் கொடுத்துக் கொண்டே இருக்க விரும்புகிருன் என்பதல்ல. மனிதன் கொடுக்கவும் விரும்புகிருன், பெறவும் விரும்புகிருன். தேவர்கள் கொடுக்கமட்டுமே விரும்புவர். மிருகமோ பெறவும் தின்னவுமே விரும்பும் ; அதற்குக் கொடுப்பதென்பதே தெரியாது. மனிதன் கொடுக்கவே விரும்பவில்லையென்றல் நீங்கள் உங்கள் பெண்களைப் பிறருக்கு ஏன் கன்னிகாதானம் செய்து கொடுக்கிறீர்கள் ? பார்க்கப் போனல் நீங்கள் உங்களுடைய இப் பொருளைப் பிறரிடம் பார்த்து ஒப்புவிப்பதற்காக அலையாத அலைச்சல் அலைந்து, அவளை ஏற்கும், ஏற்கத் தகுதியுள்ள பாத்திரன் கிடைத்ததும் அவன் ஏதோ பேருதவி செய்ததாக எண்ணிக் கொள்ளுகிறீர்கள். நாம் நம்மிடமுள்ளதைப் பிறருக்கு அளிப்பதில்தான் நன்மை இருக்கிறது என்பதை மக்கள் உணருமாறு செய்துவிட முடியுமானல் அவர்கள் உடனே தம்மிடமுள்ளவைகளைக் கொடுக்கத் தொடங்கி விடுவார்கள். நம்மிடமுள்ள ஒரு பொருள் நமக்குப் பயனில்லை என்றல் அது இன்று தேவையாயுள்ளவரே அதைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்; அது அவருக்கு உடனே கிடைத்துவிட வேண்டும். கொடுப்பதில் நன்மை இருக்கிறது என்பதை அறிந்துவிட்டால் மனிதன் கொடுப்பான், நிச்சயம் கொடுப்பானென்பது என் அனுபவம். நமக்கு சமூகமே மிகவும் பந்தோபஸ்தான பாங்கு என்று மனிதனுக்கு உறுதி

ஏற்பட்டு விடுமானுல் அவன் எதையும் தன்னிடம் வைத்துக் கொள்ளாது சமூகத்தினிடம் ஒப்புவித்துவிடு வான். இதைச் சொன்னுல் புரியாது, செய்து பார்த்தால் தானே விளங்கும். ஒரு மனிதனுவது இதைச் செய்து இதில் எவ்வளவு இன்பமும் இலாபமும் இருக்கின்றன, கவலே சிறிதும் இல்லே என்பதை உணருவானுயின் பிறகு அவனுக்குத் தன்னேப் பற்றிக் கவலேப்படவே தேவையிராது, பிறர் அவனேக் கவனித்துக் கொள்ளு வார்கள். மேலும் தன்னிடமுள்ளதைக் கொடுக்கத் துணிந்தவன் பிறரிடமிருந்து பெறவும் துணிவான். ஆகையால் நீங்கள் உங்களேப் பற்றியோ உங்கள் இனத் தாரைப் பற்றியோ இவ்வளவுக்கு நம்பிக்கை இழத்தல் சரியல்ல.

## 20. பூதானயக்ஞம் கம்யூனிசத்தை எதிர்ப்பதற்கான முயற்சியா ?

**ஐ : நீங்கள் கம்யூனிஸ்டுகளேக் கடுமையாகக் கண்டித்திருக்கிறீர்கள். பூதான யக்ஞம் கம்யூனிச எதிர்ப்புக்கெனத் தொடங்கப்பட்டுள்ள முயற்சியா ?**

வி : நான் கம்யூனிஸ்டுகளே ஏற்கெனவே கண்டித் திருப்பதும் இப்பொழுது கண்டிப்பதும் உண்மைதான். ஆனுல் கடுமையாய்க் கண்டித்தலென்பது நான் இதற்கு முன்பும் செய்ததில்லே, இப்பொழுதும் செய்வதில்லே, இனியும் செய்யேன். ஏனெனில் நான் அவர்களே என் சகோதரர்களென்று கருதுகிறேன். அவர்கள் தவருன வழியில் சென்று கொண்டிருக்கிருர்கள். ஆயினும் அவர் களுக்குப் புத்தி கூறுதல் என் கடமை என்று கருது கிறேன். நான் அவர்களின் போக்கின் நன்மை தீமை களே எடுத்துச் சொல்வது போல் அவர்களும் என்னே நன்கு புரிந்து கொண்டு நான் செய்வதிலுள்ள நல்ல,

தீய அம்சங்களைச் சுட்டிக் காட்ட வேண்டுமென்பது என் விருப்பம். நான் அவர்களைக் குறித்துக் கூறியதில் கடுமையான தொன்றுமில்லை; ஒளிவு மறைவின்றி எனக்குத் தோன்றியதை விட்டுச் சொன்னேன். அவர்கள் புரட்சியை ஒரு சாத்திரமாக்கி யிருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு திட்ட வட்டமாய் இயற்றப்பட்ட சாத்திரப்படி புரட்சி நிகழாது என்கிறேன் நான். அவர்கள் காரல் மார்க்ஸின் கூற்றை வேத வாக்கியம் போல் மதிக்கிறார்கள். ஆனால் இம்மாதிரியான மனப் போக்கு இன்று அவர் ஜீவவந்தராயிருந்தால் அவருக்கே பிடித்திராது. இன்று அவர் இருந்திருந்தால் நிலைமையை நன்கு கவனித்து புதிய புதிய விஷயங்களை, வழிகளை எடுத்துக் கூறியிருப்பார். நாம் புத்தகப் பித்தர்களாகவோ சொல் பித்தர்களாகவோ ஆகிவிட்டால் புரட்சியே நடைபெறாது. ஒரு நாட்டில் ஒரு முறையில் புரட்சி நடந்தால் அதே முறையில் இன்னொரு நாட்டிலும் நடக்கும் என்பதில்லை. புரட்சி கால தேச வர்த்தமானத்திற்கேற்ப உருவாகிறது. இதைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கு நான் புரியுமாறு விளக்கிக் கூறுவேன். எனக்கு அவர்களிடம் பேரன்புண்டு. அவர்களுள் பலர் என் நண்பர்கள். அவர்கள் ஒன்றிரண்டு இடங்களில் எனக்கு மான (வரவேற்புப்) பத்திரமும், தான பத்திரமும் கூடத் தந்திருக்கிறார்கள். ஆயினும் என் வழி தவறென்று அவர்கள் கருதினால் அவ்வாறு கருதுவதற்கு அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு. ஆனால் நான் அவர்களிடம் 'சிறிது பொறுத்துப் பாருங்கள்' என்று சொல்லுகிறேன். அவர்கள் விரும்பும் ஏழை எளியோரின் நலனையே நானும் விரும்புகிறேன். வெளியூர்ச் சரக்குகளை இங்கே கொணர்ந்து புகுத்துவதனால் பயனில்லை. நான் அவர்களைக் குறித்துக் கடுமையாக எதையும் சொன்னதில்லை. அவர்களைப்பற்றிக் கூறிய முறையிலேயே நான் பண்டித நேருவைப்பற்றியும் பேசுகிறேன்.

திட்டக் கமிஷன் முன் நான் விஷயங்களை விட்டுப் பேசினேன்; அவர்களைக் கடுமையாகக் கண்டித்தேன். ஆனால் அதே மூச்சில் அவர்களிடம், 'நான் கடுமையாகப் பேசுவதற்குக் காரணம் நீங்கள் வேறு நான் வேறென்று கருதாமையே' என்று சொன்னேன். இதே வகையில் கம்யூனிஸ்டுகளிலிருந்து நான் என்னை வேறென்று கருதாமையினாலேயே அவர்களைக் கண்டித்தேன். கரண்பாய் தெலுங்கானாவில் நடந்ததாகக் கூறிய கொள்ளைகளும் கொலைகளும் உண்மையே. தெலுங்கானாவில் கொள்ளை, கொலை நடந்திருந்தால் அதைப் பிரஸ்தாபிப்பதில் தவறென்ன? நடக்காதது எதையும் சொல்லிவிடவில்லையே. தெலுங்கானாவில் கம்யூனிஸ்டுகள் சில நல்ல காரியங்களும் செய்திருக்கிறார்கள். நான் அங்கேயே அவர்களிடம் 'இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்த பிறகும் நீங்கள் இவ்வக்கிரமங்களைச் செய்வதேன்?' என்று கேட்டேன். அவர்கள், 'நாங்கள் தப்புவதற்காகச் செய்தோம்' என்றார்கள். ஆனால் நான் தெலுங்கானாவில் என் கண்களாலேயே எத்தனையோ விஷயங்களைப் பார்த்தேன். கம்யூனிஸ்டுகள் அங்கே இலையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த குழந்தையைக் கொன்றார்கள். அக் குழந்தையின் தந்தை என்னிடம் வந்து சொல்லி அழுதார். அங்கே அவர்கள் உழவு மாடுகளை, வண்டி மாடுகளை வெட்டிக் கொன்றார்கள். விளைந்த பயிரைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆனால் இவற்றையெல்லாம் அவர்கள் நல்ல நோக்குடன் செய்திருக்கலாமென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நல்ல நோக்கம் நிறைவேறுவதற்காக ஹிம்சையைக் கையாளலாம், நல்ல காரிய மொன்றைத் தீயமுறையில் செய்வதில் தவறில்லை என்ற கருத்துள்ளவர்கள் எல்லாக் கட்சிகளிலுமே உண்டு. கம்யூனிஸ்டுகளோ இவ்வாறு தான் எண்ணுகிறார்கள். ஆனால் ஆர். எஸ். எஸ்ஸைச் சேர்ந்தவர்களும், ஜன சங்கத்தவரும், முஸ்லிம் லீகர்

களும், ஏன், காங்கிரஸ்காரர்களிலேயே சிலர்கூட இவ்வாறு எண்ணுகிருர்கள். தெலுங்கானுவில் போலீஸ்காரர்களும் அளவை மீறி சில நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அப்பொழுதே நான் அதைக் கண்டித்தேன். அப்பொழுதே அரசாங்கத்தின் கவனத்தையும் அதில் ஈர்த்தேன். அரசாங்கம் அது விஷயமாகச் செய்யவேண்டியதைச் செய்தது. ஆனுல் நான் இப்பொழுது தெலுங்கானுவின் புகழைப் பாட விரும்பவில்லை. நான் ராமன் புகழைப் பாட விரும்புகிறேனேயன்றி கெட்ட காரியங்களைப்பற்றிப் பேசவும் விரும்பவில்லை. நான் செய்யும் இக் காரியம் கம்யூனிசத்திற்கு விரோதமானதல்ல, கம்யூனிசத்தை ஸ்தாபிக்கவே இதைச் செய்கிறேன். நான் எதிர்மறையான காரியமெதையும் செய்யவில்லை; நான் செய்வது நிர்மாண வேலையே. சமூக அமைப்புப் பற்றி எனக்குச் சொந்தமான அபிப்பிராயமுண்டு. நான் ஆண் பெண்ணின் சம்பந்தம், கிராம அமைப்பு, கல்வி முதலிய எல்லா விஷயங்களிலும் மாற்றம் விரும்புகிறேன். என் இக் கருத்தின் பெயர் சர்வோதயமென்பது. இது ஒரு புதிய வரையறை செய்யப்பட்ட கருத்து. இதன் அடிப்படையில், விஞ்ஞானத்தின் உதவிகொண்டு நான் ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்க விரும்புகிறேனேயல்லாது கம்யூனிசத்தை எதிர்த்து இயக்கமொன்று நடத்த விரும்பவில்லை.

## 21. முதலில் பூதான யக்ஞமா, சமூகப் புரட்சியா?

**ஐ : சமூக அமைப்பை முற்றிலும் மாற்றினுலல்லது நிலப் பிரச்னையைத் தீர்த்தல் சாத்தியமா? இப்பொழுதுள்ள சுரண்டல் அப்படியே இருந்துகொண்டு செல்வந்தர்களின் அக்கிரமங்கள் நீடித்துக்கொண்**

டும், லேவாதேவிக்காரர்களின் கொடுமை இப்படியே இருந்தும், அகவிலை ஆகாயத்தைப் போய் எட்டிக் கொண்டும், நம் பணம் கோடிக்கணக்கில் வெளிநாடு களுக்குப் போய்க்கொண்டு மிருக்கையில் விவசாயி களுக்கு நீங்கள் இப்பொழுது வாங்கிக் கொடுத்துவரும் சிறு துண்டு நிலங்களும் அவர்கள் கையிலிருந்து பறி போய் விடாவா?

வி: இது சரியான கேள்வி. நீங்கள் கூறும் புகாரும் சரிதான். நாம் இவற்றையெல்லாம் தீர்க்க வேண்டும். இப் பூதான யக்ஞ இயக்கம் நிலமில்லாதவர் களுக்கு நிலம் அளிப்பதோடு நில்லாது சமூகத்தின் உருவையே மாற்றும். எல்லாப் பெரிய காரியங்களிலும் போல இதுவும் சிறிது சிறிது நிலம் கேட்டு வாங்குவதில் தொடங்கியிருக்கிறது. ஆனால் எல்லோரும் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்பது என் விருப்பம். எல்லாக் கட்சிகளையும் நான் கேட்டுக்கொள்வது இதுதான்: நிலப் பிரச்னையைத் தீர்ப்பதற்குமட்டும் நான் அனைவ ரின் உதவியையும் கோரவில்லை. சமூக அமைப்பை மாற்றுவதற்கும் நான் உதவி வேண்டுகிறேன். வட்டி வாங்குவதை நான் எப்பொழுதுமே எதிர்ப்பவன். இன் றைய சமூகமே வட்டிக்குக் கடன்கொடுத்தல், வட்டிக்குக் கடன் வாங்குதல் என்பதன்மீதே அமைந்திருக்கிறது. வட்டிக்கு விடுவதை நீங்கள் எதிர்ப்பதைவிட முகம்மத் பைகம்பர் எவ்வளவோ கடுமையாக எதிர்த்தார். இப் பெரிய புரட்சியைப்பற்றி மார்க்ஸ் வாதிகள் பேசவு மில்லை. ஆனால் பைகம்பர் குர்ஆனில் மீண்டும் மீண்டும் இதைக் கண்டித்திருக்கிறார். நாம் சுரண்டலுக்குதவும் ஏற்பாட்டை விரும்பவில்லை. கிராமத்தின் நிலம் கிரா மத்தின் உடைமையாகிவிட வேண்டுமென்பது நம் விருப்பம். நீங்கள் தேசீய மயமாக்குவது பற்றிப் பேசு கிறீர்களே, அது எனக்குப் பிடித்தமல்ல. இது மிகப் பெரிய நாடு. எல்லா நிலங்களையும் நான் மத்திய அரசாங்

கத்தினிடம் விட விரும்பவில்லை. இதனாலேயே முழுக் கிராமங்களாக அளிக்கும்படி கேட்கிறேன். ஒரு கிராமம் ஒருவர் உடைமையாயிருந்தால் அவர் தம் உரிமையையும், பலருக்குச் சொந்தமாயிருந்தால் அவர்கள் சேர்ந்து தம் உரிமைகளையும் எனக்குக் கொடுத்துவிடட்டும். ஆனால் நான் வேலை செய்யும் முறையே அலாதி. அது ஒரு சிற்றுளி போன்றது. இப் பூதான யக்ஞ இயக்கம் ஒரு சிற்றுளிபோல் சமூகத்தில் புகும். அதன்பின் சர்வோதய தத்துவமென்ற சுத்தி அதை மேன்மேலும் தாக்கும். அப்பொழுது இன்றைய சமூக அமைப்பே தகர்ந்துபோகும். நான் ராஷ்டிரபதியும் ஒரு சாதாரணத் தச்சனும் ஒரே ஊதியம் பெறவேண்டும் என்று விரும்புபவன். ஆகையால் இப் பெரிய காரியத்திற்கு உங்கள் ஒத்துழைப்பைக் கோருகிறேன்.

## 22. விவசாயியை நிலத்திலிருந்து அகற்றலும் பூதானமும்

ஐ : **1946**-லிருந்து இன்றுவரை சுமார் பத்து லட்சம் ஏக்கர் நிலத்திலிருந்து அதில் உழுது பயிர் செய்துவந்த விவசாயிகள் பீஹாரில்மட்டும் அகற்றப்பட்டிருக்கிறார்கள். இது இன்றும் நிற்கவில்லை, நடந்துகொண்டிருக்கிறது. இவ்வாறு லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்து அவற்றில் விவசாயம் செய்துவந்தவர்கள் ஒருபுறம் அகற்றப்பட, மறுபுறம் சிறு சிறு துண்டு நிலங்களைத் தானம் வாங்கிக் கொடுப்பதனால் நிலப்பிரச்னை மேன்மேலும் சிக்கலாக வல்லவோ ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் உங்கள் கண்முன் நடக்கும் இவ்வக்கிரமத்தை நீங்கள் பேசும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஏன் கடுமையாய்க் கண்டிக்கவில்லை ?

வி: ஐயா, நான் உங்களுக்கு என்ன சொல்ல? நான் இதை மிகவும் கடுமையாய்க் கண்டிக்கிறேன். ஆனுல் எனக்கு வெறும் கோஷமிடத் தெரியாது. நான் காசியில் விவசாயிகளிடம், 'நீங்கள் ஏன் உங்கள் நிலத்தைப் பறிகொடுக்கிறீர்கள்? நீங்கள் நிலத்தைவிட்டு அசையாது அமைதியாயிருந்து விடுங்களேன். உங்களை எவரேனும் வந்து அடித்துத் துன்புறுத்தினுல் துன்புறுத்தட்டும். துச்சாசனன் கை துரௌபதியின் ஆடையை இழுத்து இழுத்துச் சோர்ந்ததைப் போல் உங்களை அடிப்பவர்கள் கையும் களைத்துப் போகும்' என்று சொன்னேன். நான் சொன்னதைக் கேட்டு எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். அதன்பின் உத்தரப் பிர தேசத்தில் நிலத்திலிருந்து உழுவோரை அகற்றும் அக் கிரமம் நின்றது. பீஹாரிலும் அவ்வாறு நிற்கவேண்டும் என்பதே என் விருப்பம். இவ்வாறு விவசாயிகளிட மிருந்து பறிக்கப்பட்ட நிலத்தையும் நான் தானம் பெற்று உரிமையாளருக்கு, பறிகொடுத்தவர்களுக்கு திரும்பக் கொடுத்துவிடுகிறேன். இதனுல் பறிக்கும் பாவத்தைச் செய்தவர்களின் பாவம் நீங்கி அவர்கள் சுத்தமாவார்கள். நான் அவர்களையும் குறைகூறவல்ல, சுத்தி செய்யவே விரும்புகிறேன். ஆனுல் எனக்கு வேலைசெய்யத் தெரியுமேயல்லாது கோஷமிடத் தெரி யாது. நீங்கள் 'உள்ளத்தின் மாற்ற'மென்று நான் சொல்வதைக் கேலி செய்கிறீர்கள். ஆனுல் உங்கள் உள்ளமும் மாற்றப் படுவதை நீங்கள் உணரவில்லை. இதற்குக் காரணம் மார்க்ஸின் ஒரு புத்தகம் உங்கள் உள்ளங்களை மாற்றியிருப்பதே. மார்க்ஸ் கொம்பையும் துப்பாக்கியையும் காட்டிப் பயமுறுத்தியா உங்கள் உள் ளங்களை மாற்றினுர்? உங்கள் உள்ளங்கள் புத்தகத் தைப் படித்ததனுலேயே மாறிவிட, நீங்கள் கம்யூனிஸ்ட் டுகள் ஆகியிருக்கிறீர்கள். சங்கராச்சாரியர் தத்துவப் பிரசாரம் செய்த முறையில் நாமும் செய்யவேண்டும்.

நாம் எல்லோருக்கும் விஷயத்தை விளக்கிக் கூறவேண்டும். நான் பேசும் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து என் வார்த்தையைக் கேட்டுப் போகிறார்கள். வீட்டிற்குப் போய், 'சூரிய ஒளியையும் காற்றையும் நீரையும் போல் நிலமும் ஆண்டவன் அளிப்பு' என்கிறார்கள். இதிலும் அதிகமாக கம்யூனிஸ்டுகள் விரும்புவதுதான் என்ன? அவர்களுக்கு நான் கடவுள் பெயரைச் சொல்வது பிடிக்காவிட்டால், 'ஐயா, என்றால் கடவுள் பெயரைச் சொல்லாமல் இருக்கமுடியாது. அதற்காக நீங்கள் என்னை மன்னியுங்கள்' என்று நான் அவர்களிடம் சொல்லுகிறேன்.

## 23. சிறிதே நிலமுள்ளவர்கள் தானமளிக்கிறார்களா?

ஐ: உங்கள் இப் பூதான யக்ஞத்தில் ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரிய நிலச்சுவான்தார்களையும் மிராசுதார்களையும்விட, நடுத்தர மிராசுதார்களும் எளிய விவசாயிகளுமே அதிக தானங்கொடுக்க முன் வருகிறார்கள் என்பது சரியா?

வி: எனக்கு எல்லோரும்தான் தானங் கொடுக்கிறார்கள்; அனைவரின் உதவியும்தான் கிடைத்து வருகிறது. ஆனால் இது ஆரம்பந்தானே. நம் நாட்டில் லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளும், நடுத்தர வகுப்பினரும் இருக்கிறார்கள். அவர்களைவிடப் பெரிய நிலச்சுவான்தார்கள் மிகவும் குறைவு. ஆகையால் சிறிய விவசாயிகளிடமிருந்து அதிக தானம் கிடைத்து வருகிறது. ஆனால் பெரியவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு கொடுத்தவர்களுள் காசியிலும், அஸாரிபாக்கிலும் உள்ள நிலச்சுவான்தார்களைக் குறிப்பிடலாம். இனி எல்லோர் உள்ளங்களுமே இளகியாக வேண்டும்.

ஏனெனில், இந்த நம் கோரிக்கை இந்த யுகத்தின், காலத்தின் கோரிக்கையாகும், தேவையாகும்.

## 24. வர்க்கப் போராட்டம்

ஐ: 'வர்க்கப் போராட்டத்தின் தவிர்க்க வியலாத விளைவுகளைப் புரிந்து கொண்டதினுலேயே உண்மை நிலையை உணரும் பெரிய நிலச்சுவான்தார்கள் உங்கள் பூதான யக்ஞத்திற்கு உதவ முன்வந்திருக்கிருர்கள்; வர்க்கப் போராட்டந்தான் வர்க்கக் கூட்டுறவுக் கருத்தை அவர்களிடையே தோற்றுவித்திருக்கிறது' என்பது உண்மையா ?

வி: நீங்கள் இப்பொழுதுதான் பெரிய நிலச்சுவான்தார்கள் உங்களுக்கு அதிக உதவி அளிக்கவில்லையாமே என்று கேட்டீர்கள்; நீங்களே அதிகம் அளிக்கிருர்களென்று சொல்லுகிறீர்கள். இவை இரண்டிலும் உண்மை எது என்பதை நீங்களேதான் முடிவுசெய்ய வேண்டும். நான் பெரிய நிலச்சுவான்தார்களைப் பாதுகாக்கக் கிளம்பியிருப்பதாகப் புகார் கூறப்படுகிறது. ஆனுல் விேேனாபா எல்லோரையும்தான் காப்பான். அவன் நிலச்சுவான்தார்களைக் காப்பான், விவசாயிகளைக் காப்பான், காங்கிரஸ்காரர்களைக் காப்பான், சோஷலிஸ்டுகளை, கம்யூனிஸ்டுகளை, ஜனசங்கக்காரர்களை, ராஷ்ட்ரீய சுயம் சேவகர்களை, கிஸான்-மஜ்தூர்-பிரஜாவாதிகளை, அரசாங்கத்தை, இந்நாட்டை, வெளிநாடுகளைக்கூடக் காப்பான். ஆனுல் அதற்கு ஒரு நிபந்தனை உண்டு. அதாவது நீங்கள் அனைவரும் அவனுடன் ஒத்துழைக்க வேண்டும். நான் ஒரு வெறும் உள்ளீடற்ற மூங்கில் குழாய். ஆனுல் அதன் மூலம் பகவானின் குரல், வாக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது. எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்பது என் விருப்பம். ஆங்கிலேயர் இங்கிருந்து போனுர்களே, அவர்கள்

மனம் இளகியா, மாறியா போனுர்களென்று கேட்கிருர் கள். அவர்கள் மனமாற்றமுற்று, மனமிளகி இங்கிருந்து போகவில்லே. ஆனுல் அவர்கள் புத்திசாலிகளாகையால் போய்விட்டார்கள். இதேபோல பெரிய, சிறிய ராஜாக் களும் புத்திசாலித்தனமாக தம் ராஜ்யங்களே விட்டார் கள். ஜமீன்தார்களிலும் சிலரது மனம் இளகி மாறும்; சிலரது அறிவுக்கு இது சரியென்று படலாம்; சிலர் வேறு வழியில்லேயேயென்று நிலமளிக்கலாம். பக வானது பணி பலவகையிலும் நிறைவேறுகிறது. ஆனுல் எவரேனும் வர்க்கப் போராட்டத்திற்குத் தப்புவதற்காகத் தானமளித்தால் அவர் அவ்வாறு செய்வதில் தவறென்ன? கிராமத்தில் தீப்பற்றுமென்று பயந்து ஒருவர் வெளி யேறுவதில் தவறென்ன? என் படுக்கையில் பாம்பிருக் கிறது, அது தீண்டுமென்று நான் படுக்கையைத் துறக் கிறேன், சங்கராச்சாரியரையோ, சுகப் பிரம்மத்தையோ போல் வைராக்கியத்திஞலல்ல என்ருல், என் துறவு தவரு? வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்கவே, அதற் குத் தப்பவே ஒருவர் தம் நிலத்தை அளித்தால் அவர் செய்வதில் தவறென்ன? நீங்கள் அவ் வர்க்கப்போராட் டத்தை எதற்காக உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண் டிருக்கிறீர்கள்? வர்க்கப் போராட்டமின்றியே உங்கள் காரியம் நடந்தேறுவதானுல் அதில் உங்களுக்கு நஷ்ட மென்ன? அதற்காக நீங்கள் வருந்தக் காரணமில்லேயே.

ஐ: உங்களது இப்பணி இந்தியப் பண்பாட் டிற்கு ஏற்றதா, அல்லவா?

வி: நீங்கள் என் முகத்தை, அங்க அவயவங்களேப் பார்த்துவிட்டு நான் செய்யும் இக் காரியம் இந்தியப் பண்பாட்டிற்கு உகந்ததா, இது மேல் நாட்டிலிருந்து நான் கொணர்ந்ததாவென்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

## 25. உதவியும் பிரதிநிதித்துவமும்

**ஐ: நீங்கள் உங்கள் வேலைக்கு எந்த ஸ்தாபனங்களின் உதவியைப் பெறுவீர்கள்? எதன் உதவியும் பெருமல் சொந்தத்திலேயே ஸ்தாபனமொன்று அமைப்பீர்களா? நீங்கள் இல்லாதபொழுது உங்கள் கருத்துக்கள் எவ்வாறு நிறைவேற்றப்படும்? நீங்கள் இங்கிருந்து போகும்பொழுது உங்கள் வேலையைச் செய்வதற்கு யாரை நியமிப்பீர்கள்?**

வி: நான் இதற்கென புதிய ஸ்தாபனமெதுவும் அமைக்கமாட்டேன். என் வேலையை, எல்லோரும் எல்லா ஸ்தாபனங்களும் செய்கின்றன, இனியும் செய்யும். எல்லோருமே நிலம் கோரிப் பெறுவார்கள். இதற்கு நான் எல்லாருடைய கூட்டுறவையும் பெற்று வருகிறேன். எந்த ஸ்தாபனமும் தன் இஷ்டம்போல் தனித்தே இப்பணியைச் செய்யலாம், பிற ஸ்தாபனங்களுடன் சேர்ந்தும் செய்யலாம்.

ஆனல் பெற்ற நிலத்தை வினியோகிக்கும் கமிட்டிகளை மட்டும் நானே அமைக்கிறேன். வினியோகமும் நான் கூறும் முறையிலேயே நடக்கிறது. போதிய நிலம் வசூலித்தான பிறகு, ஒரு ராஜ்யத்தில் தேவையான அனுபவம் ஏற்பட்டபின் வினியோகத்திற்கு சமீபத்தில் உத்தரப் பிரதேசத்தில் கமிட்டி அமைக்கப் பட்டது போன்று கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன.

நான் கேட்டு வாங்கும் நிலங்களை உடன் கொண்டு போகப் போவதில்லை; ஆங்காங்கு விட்டுப் போகவேண்டியதுதானே! அவ்வாறு நான் விட்டுச் செல்லும் நிலங்களைப் பார்க்கும்பொழுது மக்களுக்கு அவை எவ்வாறு பெறப்பட்டனவென்பது நினைவுக்கு வரும்; எனவே என் கருத்துக்களை அந்நிலங்களே என் பிரதிநிதிகளாயிருந்து கொண்டு எனக்குப் பின்னும் பரப்பிக்கொண்டிருக்கும்.

ஆறுகள் கடலில் போய்க் கலந்து கடலாகிவிடுகின்

றன. தீப்பற்றுவதனுல் விறகு தணலாகிறது. என் பணியைச் செய்வோரும் அப்பணியுடன் ஒன்றிவிடுவார்கள். அவர்களும் என் கருத்துப்படியேதான் பேசுவார்கள். அவர்கள் குறைந்தது என்னைப் போலவேதான் நடிக்கவாவது வேண்டியிருக்கும். இப்பொழுதுதான் வர்தாவிலிருந்து 'அங்குள்ள ஒரு சகோதரரின் பேச்சு காரசாரமாயிருக்கிறது, அதில் சிறிது உஷ்ணமதிகமாயிருக்கிறது' என்ற புகார் வந்தது. நான் இன்றே அவரை எச்சரித்துக் கடிதம் எழுதிவிட்டேன். நான் எல்லோரிடமும், 'நிலமளியாதவர்களை நிந்தியாதீர்கள்; ஏனெனில் இன்று கொடுக்காதவர் நாளை நிச்சயம் கொடுப்பார்' என்று சொல்லி வருகிறேன். கம்யூனிஸ்டுகள், 'எங்களால் பெரிய மனிதர்களை அணுக இயலாது' என்று சொன்னதற்கு நான் அவர்களிடம், 'கிராமங்களுக்குப் போங்களேன். ஏழை எளியோரிடமே கேட்டு வாங்குங்களேன். உங்களால் முடிந்ததை நீங்கள் செய்தால் போதும். பெரிய மனிதர்களைக் கேட்கும் வேலையைப் பிறர் செய்துகொள்வார்கள். பீஷ்மனுக்குப் பதில் சொல்ல அர்ஜுனன்தான் வேண்டும்' என்று சொன்னேன்.

**ஐ: நீங்கள் 'படை'யென்றும் 'போர்'என்றும், 'தாக்குதல்'என்றும் பேசுகிறீர்களே; இச் சொற்கள் காரணமாக சிலருக்கு உங்களிடம் அச்சமாயிருக்கிறது. இவர் சண்டைக்காரராகவல்லவோ தோன்றுகிறது என்று அவர்கள் எண்ணுகிறுர்கள்.**

வி: சண்டையே என் நோக்கமானுல் நான் ஏழை, எளியோரிடம் ஏன் தானம் கேட்கிறேன்? ஏழைகளிடம் அவர்களிலும் எளியோருக்கென தானம் வாங்கப்படுவதனுல் ஒரு தார்மிகச் சூழ்நிலை உண்டாக்கப்படுகிறது. இச் சூழ்நிலையினுல், பொதுஜன அபிப்பிராயத்தினுல் பெரிய மனிதர்களும் பாதிக்கப்படுகிறுர்கள். நான் மிகவும் எளியோரிடமும் தானம் கோரிப் பெறவே, பெரிய

மனிதர்கள் ஆயிரம், லட்சம் ஏக்கர் என்று தானமளித்தார்கள். சிறியோரின், ஏழை எளியோரின் இத்தியாகம் பெரியவர்களின் நல்லறிவை, விவேகத்தைத் தட்டி யெழுப்புகிறது. நான் செய்யும் தாக்குதல் இதுவே. நான் பெரியவர்களிடம் மட்டும் தானம் பெற்று அவர்களுக்கு விரோதமாகப் பிறரைத் தூண்டிவிடுவேனுனல் நான் போர் தொடுப்பதாய்க் குறைகூறப்படலாம். ஆனல் சிறியோர் பெரியோரென்ற வேற்றுமை சிறிதும் பாராட்டாதவர்களே, உள்ளவர்களே கொடுங்கள் என்று கேட்கிறேம்; கொடுப்பதைப் பெறுகிறேம். இதில் சண்டை, போர் என்றெல்லாம் சந்தேகிப்பதற்கே இடமில்லேயே. நிலமளிப்பவர்களே என் படையில் வீரர்களாகிவிடுகிருர்கள். இதனல் உருவாகி வீசும் காற்று பெரியவர்கள் மீதும், நீங்கள் விரோதிகளென்று சொல்லும் அந்தப் பெரியவர்கள் மீதும் படுகிறது. இதனலேயே என் பேச்சு எல்லோருக்கும் நன்மை அளிப்பதாய் அமைகிறது; நம் முயற்சி நாளுக்கு நாள் கிளேத்துப் பெருகுகிறது.

இன்று நான் கூலிவேலே செய்வோரிடம், 'நீங்கள் உங்கள் வேலேயை நிறுத்தி எஜமானருடன் சண்டையிடாதீர்கள். வேலேயே நம் வழிபாடு, வேலே செய்தலே நம் புனிதக் கடமை. நாம் செய்யும் பணி எஜமானருக்குச் செய்வதல்ல. அவர்களுடன் போரிட வேறு முறைகளேக் கையாளுங்கள்' என்று சொன்னேன். கூலிவேலே செய்து வயிறு வளர்க்கும் ஏழை எளியோரும் தானம் செய்யத் தொடங்கும்பொழுது பெரிய முதலாளிகளின் விவேகபுத்தி, பகுத்தறிவு விழிப்பெய்துகிறது. நம் 'போரி'ன் முதல் 'தாக்குதல்' இதுவே.

## 26. சத்தியாக்ரஹம்

ஐ : நீங்கள் நிலப்பிரச்னையை அன்பின்மூலம் தீர்க்கப் போவதாகச் சொல்லுகிறீர்கள். காந்தி வழியும் அன்பு வழிதான். ஆனால் அவரது அன்பு வழியில் சத்தியாக்ரஹத்திற்கும் இடமிருந்தது. நீங்கள் காந்திஜியைப்போல் சத்தியாக்ரஹம் ஏன் செய்வதில்லை ? அதனால் ஏழை எளியோருக்கும் நிலமில்லாதோருக்கும் தன்னம்பிக்கையும் புதிய உற்சாகமும் பிறக்கவும், அவர்களிடையே கட்டுப்பாடும் ஏற்படுமே.

வி : நான் இன்று செய்துவருவதே சத்தியாக்ரஹந்தான். சத்தியாக்ரஹம் செய்வதற்குத் தகுதி உண்டென்பதை அறியப் பரீட்சை கொடுக்க வேண்டும். சத்தியாக்ரஹத்திற்குத் தகுதி பெறுவதற்கு ஏழையும் முதலில் தன் உடைமையிலிருந்து தானமளிக்க வேண்டும். ஏனெனில் வெறும் ஏழைமை மட்டும் சத்தியாக்ரஹி ஆவதற்குப் போதிய தகுதியாகாது. சுரண்டலல்லாமல் ஒருவனது ஏழைமைக்கு வேறு காரணங்களும் இருக்கக்கூடும். ஓர் ஏழையும் நமக்கு நிலமளிக்கும் பொழுது தார்மிகச் சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அவன் ஒரு தத்துவத்தை உணர்ந்தான், உடனே அதன்படி நடந்தான் என்று ஆகிறது. மறுபுறம் நாம் பெரிய மனிதர்களிடமும் நிலம் பெறுவதன்மூலம் அவர்களிடையிலும் நம்மைச் சேர்ந்தவர்களைத் தோற்றுவிக்கிறோம். இவ்வாறு நம் படை ஒரு கலப்புப் படையாகிறது. இதில் சிறியோர், பெரியோர், ஏழை, தனவந்தன் ஆகிய இரு சாராரும் இருக்கிறார்கள்.

இறுதி நடவடிக்கையாக சத்தியாக்ரஹம் செய்யவே நேராது என்பது என் கருத்தல்ல. தந்தை நோயுற்றிருந்தால் பிள்ளை அவருக்கு வைத்தியம் செய்வதுபற்றி

யோசிப்பானே யல்லாது ஈமச் சடங்குக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யமாட்டான். ஆனால் தந்தை இறந்துபோனாலோ ஈமச் சடங்கும் செய்வான். சத்தியாக்ரஹம் என்பது இறுதியில் செய்யவேண்டியது. அதற்கு முன் செய்யவேண்டியவை எத்தனையோ உண்டு. எனக்குள்ள பெயர், கீர்த்தியெல்லாம், பெருமையெல்லாம் நான் ஒரு சத்தியாக்ரஹி என்பதனால் ஏற்பட்டதே என்பது உங்களுக்குத் தெரியும். எல்லாம் செய்து பார்த்தபிறகும் எஜமானர்கள் நிலத்தை விட்டுக் கொடா விடில் தானம் அளித்துள்ள சிறியோர் பெரியோர் அடங்கிய நம் இக் கூட்டுப்படை அச்சமயத்தில் செயல் படும். இப்பொழுது நடந்த விஷயந்தானே; உழு வோரை நிலத்திலிருந்து அகற்றும் அக்கிரமம் நடந்த பொழுது நான் காசியில், 'நிலத்தில் உழுவோர் எக் கஷ்டங்களையும் பொறுக்கட்டும், ஆனால் நிலத்திலிருந்து மட்டும் வெளியேறக் கூடாது' என்று சொன்னேன்.

நான் கம்யூனிஸ்டுகளிடமும், 'நீங்கள் சத்தியாக்ர ஹத்தை நிறுத்திவிட்டு பூதானயக்ஞப் பணியில் இறங் குங்கள். இதுவும் ஒருவகைச் சத்தியாக்ரஹமே' என்று சொன்னேன். ஆனால் அவர்கள், 'எங்கேனும் ஏழை, எளியோர் சொல்ல முடியாத, அளவை மிஞ்சிக் கொடு மைக்கு உள்ளாக்கப்பட்டால் அப்பொழுது நாங்கள் என்ன செய்வது?' என்று கேட்டதற்கு நான், 'எங்கே னும் இத்தகைய தீப்பற்றி எரியத் தொடங்கினால் அதை அணைக்க நீங்கள் போங்கள். தீப்பற்றினாலும் அதை அணைக்கக் கூடாதென்று நான் சொல்லவில்லை' என்று பதில் சொன்னேன்.

# 27. அமைதியும் புரட்சியும்

ஐ: ஏழை எளியோர் எவ்வளவு நாட்கள்தான் பொறுமையாய் நல்ல காலம் வருமென்று காத்திருப் பார்கள்?

வி: நான் மக்களை ஒரு சரியான வழியில் அழைத் தேக விரும்புகிறேன். ஆகையால் இன்றைய நிலைமை யைக் கூடிய விரைவில் மாற்றப் பார்க்கிறேன். நான் விரும்புவது அமைதிதான்; ஆனால் நான் அதை விரும்பு வது, உண்மைப் புரட்சிக்காக. 'மயானத்தின் அமைதி' எனக்குத் தேவையில்லை. மயானத்தின் நிலைக்குப் பதிலாக நான் வேறு எதையும் ஏற்பேன், பொறுத்துக் கொள்வேன். 'நான் புரட்சிபற்றிப் பேசுகிறேன், ஆகை யால் நான் அபாயகரமானவன் என்று இன்றுகூட எவரோ சொல்லியிருக்கிறார். உண்மை. நான் அபாய கரமானவனே, ஆபத்தானவனே. யாருக்கு? இன்றைய நிலையை அப்படியே வைத்திருக்க விரும்புவோருக்கும், தம் பொறுப்புக்களை உணராதவர்களுக்கும்; செயலாற்ற வேண்டிய சமயத்தில் ஒன்றும் செய்யாது வாளா யிருந்து, தம் பணப்பையைச் சிறிதும் திறவாமல் பற்றிக் கொண்டிருக்க விரும்புவோருக்கும். இச் சமூக அமைப்பை மாற்ற விரும்பாதவர்களுக்கு நான் ஆபத் தானவனே.

நான் புரட்சியைத் தடுக்க விரும்பவில்லை. அதைச் சரியான பாதையில் செலுத்த, சரியான முறையில் அதை நடத்த விரும்புகிறேன். காந்திஜி ஒரே வருஷத் தில் சுயராஜ்யம் பெறப் போவதாய்ச் சொன்னார். அவர் அஹிம்சை வழியில், அதனால் சிறிது தாமதம் ஏற்பட் டாலும் பாதகமில்லையென்று, மக்களை நடத்தினார். என் னிடம், 'ரஷ்யாவில் விரைவில் காரியமாயிற்றே, சீனத்தி லும் நினைத்தமாத்திரத்தில் எல்லாம் நடந்துவிட்டதாமே, இங்கு மட்டும் ஏன் அப்படி நடக்கவில்லை' என்று

கேட்டுக்கொண்டே யிருக்கிருர்கள். ஆனால் அவர்கள் அங்கெல்லாம் முதலில் ஹிம்சைப் புரட்சி நடந்தது, பிறகே வேலை நடந்தது என்பதை மறந்துவிடுகிருர்கள். 'என் இயக்கத்தினால் எளிய ஏழைப் பொதுமக்களிடையே அதிருப்தி பெருகும்; அவர்கள் பொறுமை இழந்து ஹிம்சையில் இறங்கிவிடுவார்கள்' என்று என்னிடம் சொல்லுகிருர்கள். எனக்கு ஹிம்சை வேண்டாம். ஹிம்சையைத் தடுப்பதற்கென்றேதான் நான் இவ்வியக்கம் நடத்துகிறேன். ஆனால் மயானத்திலுள்ளது போன்ற அமைதியும் எனக்குத் தேவையில்லை. என் இயக்கம் வலுப்பெறுமானால் நிலமளியாதவர்கள் மிகவும் குறைவாகிவிடுவார்களாகையால் அப்பொழுது எத்தகைய ஹிம்சைக்கும் தேவையே இராது. ஆகையால் ஹிம்சையை விரும்பாதவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்துவிட வேண்டும். இன்றைய நிலைமையை அப்படியே வைத்திருக்க விரும்புகிறவர்கள் ஹிம்சையின் கையிலிருந்து தப்பவியலாது. நான் ஹிம்சையை விரும்பவில்லைதான்; ஆனால் இன்றுள்ள நிலைமையையும் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க இயலாது.

## 28. கம்யூனிஸ்டுகளின் சுத்தி

**ஐ: நீங்கள் உங்கள் வேலையினால் எல்லாக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் சுத்தி பெறும் என்று சொல்லுகிறீர்களே, கம்யூனிஸ்டுகளும் சுத்தி செய்யப் பெறுவார்கள் என்பது உங்கள் கருத்தா?**

வி: ஆம். அவர்கள் மட்டும் விலகிவிட முடியுமா? அவர்களுக்கு சுத்தி தேவையில்லையா? அவர்களும் நம்மைச் சேர்ந்தவர்கள் தாமே. இவ்வழியில் செல்லுவதனால் வெற்றி கிடைத்திருக்கிறது, பிரச்னைகள் தீருமென்பதற்கு அறிகுறிகள் காண்கின்றன என்பதை அவர்கள் உணருவார்களானால் அவர்களும் நம்முடன் வந்து

சேர்ந்து விடுவார்கள். இன்று பன்னிரண்டு லட்சம் ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. இது பெரிய சாதனை. ஆனால் இதனால் பிரச்னை தீர்ந்துவிடவில்லை. பிரச்னை தீர்ந்துவிடும் போலிருக்கையில் அவர்களும் நமக்குக் கைகொடுப்பார்கள். இன்று நம்முடன் அபிப்பிராய பேதமிருந்தும் அவர்கள் நமக்கு மான (வரவேற்புப்) பத்திரம் அளித்ததோடு தான பத்திரமும் அளித்திருக்கிறார்கள். வேலை சரியாய், நல்ல முறையில் நடப்பதை அவர்கள் பார்த்தார்களானால் ஏன் ஹிம்சை வழிக்குப் போகிறார்கள்? அவர்கள் தியாக புத்தியுள்ளவர்கள், உழைப்பாளிகள், பிடிவாதமுள்ளவர்கள். அவர்கள் வேண்டுவது புரட்சி. ஹிம்சையில், வெட்டிலும் குத்திலும் அவர்களுக்கு ஏதோ அலாதிப் பிரியமென்பது தவறு. தெலுங்கானாவில் நான் அவர்களுக்கு அறிவுறுத்த எவ்வளவோ முயன்றேன். அப்பொழுது அவர்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை. ஆயினும் சிறிது காலந் தாழ்த்தியேனும் அவர்கள் தம் போராட்டத்தை நிறுத்தி விட்டார்கள்.

## 29. தீயோர்

ஐ: நீங்கள் 'தீயோர்' என்பது யாரை?

வி: நாட்டுப் பணிக்கு உதவாமல் அதை எதிர்ப்போரே தீயோர்.

ஐ: இங்கே (பீஹாரில்) கால் பகுதியினரிடம் நிலமில்லையென்று சொல்லலாம். உங்களால் இவர்கள் அத்தனை பேருக்கும் நிலமளித்து விடமுடியுமா?

வி: நாம் அவர்களுக்கு நிலமில்லை யென்றால் கிராமத் தொழில்களைத் தருவோம். உள்ள நிலத்தில் அரைக்கால் பகுதி கிடைத்தால் அந் நிலத்தையும் கிராமக் கைத் தொழில்களையும் கொண்டு பிரச்னையைத் தீர்த்து விடலாம்.

**ஐ: ஆனால் நீங்கள் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 5 ஏக்கர் நிலந்தானே கேட்கிறீர்கள்?**

வி: அது நாம் குறைந்த பக்ஷமாகக் கேட்பதே. அவ்வாறு கேட்பதற்குக் காரணம், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சர்வோதய குடும்பத்தையாவது குடியேற்ற முடியவேண்டும் என்பதே. ஆனால் ஐந்து ஏக்கர் என்பதற்குப் பொருள் நாம் குறைந்த பட்சம் ஒவ்வொரு கிராமத்திலும் புகவாவது முடியட்டும் என்பது தான். பார்க்கப் போனால் மொத்தத்தில் ஆறில் ஒரு பகுதியை எல்லோரிடமிருந்தும் பெற வேண்டுமென்பதே நான் என் மனத்தில் செய்து கொண்டுள்ள கற்பனை. ஏனெனில் தரித்திர நாராயணன் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஆறுவது நபராவார்.

## 30. பூதானத்தில் அரசாங்கத்தின் பங்கு

**ஐ: நீங்கள் அரசாங்கத்தினிடமும் நிலம் தருமாறு கேட்பீர்களா?**

வி: அரசாங்கத்தினிடம் முதலிலேயே கேட்பது தவறு. அதனால் ஜனசக்தி குறைந்துபோகும். இந்திய அரசாங்கம் ஒரு கோடி ஏக்கர் நிலமளிப்பதாக ஜாடைமாடையாய்ச் சொன்னதுண்டு. நான் அதற்கு முதலில் ஜனசக்தி விழித்தெழட்டும், பிறகு உங்களிடம் வாங்கிக் கொள்கிறேனென்று சொன்னேன். உத்தரப் பிரதேசத்தில் அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த ஸ்ரீ பந்த் அம்மாகாண பூதான கமிட்டியிடம், 'நீங்கள் வசூலித்துள்ள நிலத்தை வினியோகியுங்கள். அப்பொழுது அரசாங்க நிலமும் உங்களுக்குக் கிடைக்கும்' என்று சொன்னார். ஆகையால் ஜனசக்தியைக் கொண்டே நாம் முதலில் நிலப் பிரச்னையைத் தீர்ப்பதில் முனைய வேண்டும்.

## 31. பூதானமும் ஞானதானமும்

ஐ : மாணவர்களாகிய நாங்கள் பூதானத்துடன் ஞானதானமும் செய்வது எவ்வாறு?

வி : தற்கால மாணவர்களுக்கு இருப்பது ஞானமா, அஞ்ஞானமா வென்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால் அவர்கள் ஞானம் பெற விரும்பவே செய்கிறார்கள். அவர்கள் நன்றாய்ப் படிக்க வேண்டுமென்பது என் விருப்பம். இன்றோ பல மாணவர்களுக்கு பூதான யக்ஞம் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. ஆகையால் மாணவர்களுக்கு இவ்வெல்லாப் பிரச்னைகளும் விவகாரங்களும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். நம் இயக்கத்தில் அவர்களுக்குள்ள பங்கு இதுவே; அவர்கள் அளிக்கக் கூடிய உதவி இதுவே. அவர்கள் அளிக்கக்கூடிய மற்றொரு உதவி, குறைந்தது ஒரு மணி நேரமாவது உடலால் உழைத்தல். ஏனெனில் இன்று அவர்கள் பெறும் கல்வியில் உடலுழைப்புக்கு இடமே அளிக்கப்படவில்லை. பூதான யக்ஞத்தில் எல்லோருக்கும் நிலமளிக்க வேண்டுமென்று சொல்லப்படுவதன் காரணம் எல்லோரும் உடலுழைப்புச் செய்யமுடிய வேண்டும் என்பது.

## 32. பூதானமும் பிரம்மசரியமும்

ஐ : பூதான யக்ஞத்தில் ஈடுபடும் பொருட்டு ஒருவர் பிரம்மசரிய விரதம் அனுஷ்டிக்க விரும்புகிறார். இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

வி : பூதான யக்ஞமென்பது ஒருவரை ஆயுள் முழுமையும் பிரம்மசாரியாய் இருக்குமாறு நிர்ப்பந்திக்கக்கூடிய காரியமல்ல. இப்பணிக்காக இரண்டு மூன்று வருஷம் புலனடக்கம் தேவைப்படலாம். ஏனெனில் இது இரண்டு, மூன்று வருஷங்களுக்குள் முடிந்துவிடக்கூடிய காரியமே. ஒருவருக்கு தன் அந்த

ராத்மாவினிடமிருந்து பிரம்மசரியத்திற்கு வேண்டிய தூண்டுதலிருக்க, அவருக்கு வெளியிலும் ஒரு காரணம் கிடைத்துவிடுமானல் அவர் அதையும் பயன்படுத்திக் கொள்கிருர். பீஷ்மர், காந்தியடிகள் ஆகியோர் வாழ்க்கையில் நடந்தது இதுவே. காந்தியடிகள் சாதாரணமாய் மக்களுக்குப் பணிபுரிய உதவுமென்ற எண்ணத்திஞல் பிரம்மசரியத்தைத் தொடங்கியவர், போகப்போக நல்ல பழுத்த பிரம்மசாரியாய் ஆகிவிட்டார். எவருக்கேனும் பூதான யக்ஞம் இம்மாதிரியான ஒரு காரணமாய் இருந்து உதவும் பட்சத்தில் அவர் அதைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை; ஆனல் இவ்வேலைக்கென்றே பிரம்மசரிய விரதம் ஏற்கத் தேவையில்லை.

## 33. இது இயந்திர யுகமா?

**ஐ: நீங்கள் விவசாயமும் கிராமக் கைத்தொழில்களும் உங்களது சீதா-ராமர்கள், அதாவது கிராமக் கைத்தொழில்களின்றி உங்கள் பூதானம் பயன் தராது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனல் இந்த இயந்திர யுகத்தில் உங்கள் கிராமக் கைத்தொழில்கள் எப்படி நடக்கும்?**

**வி:** இது இயந்திர யுகமல்ல, நம் யுகமே என்பதை நான் சோதனை செய்து பார்த்த பிறகு உணர்ந்தேன். நான் தில்லியில் மாவரைப்பதற்காக இயந்திரத்தைத் திரித்தபொழுது இது இயந்திர யுகமாயிருந்தும் அதிலிருந்து மாவு வெளிப்படவே செய்தது. ஆனல் அரசாங்கம் அகதிகளுக்கு உணவுக்காக கோதுமை கொடாது மாவையே கொடுத்து வந்தது. ஏனெனில் இந்த இயந்திர யுகத்தில் இயந்திரத்தைச் சுழற்றிஞல் அது சுழலாது என்பது அரசாங்கத்தின் எண்ணம் போலும்! தில்லியிலுள்ளோர் மாவை மட்டுமே பார்க்கிருர்கள்; கோதுமை என்பது என்ன, அது எப்படி

யிருக்கும் என்பதே அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ! அமெரிக்காவிலோ குழந்தைகளுக்கு மாவுந் தெரியாது, கோதுமையுந் தெரியாது. ஏனெனில் அவர்கள் பார்த்திருப்பது ரொட்டி ஒன்றுதான். இக்காலத்தில் இயந்திரத்தில் கோதுமையை இட்டுத் திரித்தாலும் அதிலிருந்து மாவு விழுவதில்லை என்றால் இது இயந்திர யுகமென்பதை நான் ஒப்புவேன். ஆனால் யுகத்தினால் நம் சக்தியையோ, ராட்டையையோ தடுக்க முடியாது. நாம் தேவையான கருவியைக் கையாளுவதில் தடையில்லை. பண்டைக் காலத்தவர் கலியுகம், விதி என்றெல்லாம் நம்பி வந்ததைப்போல் இப்பொழுது மக்கள் இயந்திர யுகம், இயந்திர யுகமென்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இது இயந்திர யுகமல்ல, விஞ்ஞான யுகம். விஞ்ஞானத்தை சிறிய தொழிலுக்கும் சரி, பெரிய தொழிலுக்கும் சரி பயன்படுத்தலாம். நாம் விஞ்ஞானத்திடம் கோரும், அதற்குக் கட்டளையிடும் கருவியை அது நமக்குச் செய்து தரும். அது பெரிய ஆலையையும் அமைத்துத் தரும், ராட்டையையும் செய்து தரும். ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு காலத்திலும் ஒரே இயந்திரம் உபயோகத் திலிருக்கும் என்பதல்ல. ஒரு நாட்டில் வழக்கிலுள்ள இயந்திரம் இன்னொரு நாட்டில் ஏற்கப்படாது போகவும், இக்காலத்தில் ஏற்கப்படுவது இன்னொரு காலத்தில் ஏற்கப்படாது போகவும் கூடும். இவ்வாறு இயந்திரத்தின் உபயோகம் காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்தது. இந்தியாவின் மக்கள் அனைவருக்கும் வேலையளிக்கக் கூடிய கருவியே, இயந்திரமே இந்நாட்டிற்குப் பயன்படும்.

## 34. பூதானமும் முதலாளித்துவமும்

**ஐ: நீங்கள் பூதானம் கேட்பதன் மூலம் முதலாளித்துவத்தை உயிர்ப்பிக்கவில்லையா?**

வி: நாம் நஷ்டஈடின்றி நிலம் தருமாறு கேட்கிறோம். இம்முறையை ஆதரிக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இது பிடித்தமாயிருக்க வேண்டும். நாம் நஷ்டஈட்டை தானமாய்ப் பெற்றுவருகிறோம். இதில் மக்களிடம் உள்ள நற்குணத்தை வெளியே கொணரவே முயற்சி செய்யப்படுகிறது. இதையே அவர்கள் தீது என்றுகொண்டால் படிப்பித்தல், அறிவு புகட்டல் என்பதன் பொருளையே அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றே சொல்லவேண்டியிருக்கும். கல்வி புகட்டல் என்பதற்கு மனிதனது உள்ளத்திலுள்ள நற்குணங்களை வெளியே கொணர்ந்து துர்க்குணங்களை அடக்குதல் என்பதே பொருள். நாம் குப்பை கூளங்களை வீட்டு முற்றத்தில் பரப்பி வையாது குழி தோண்டிப் புதைப்பதைப் போல, மனிதனின் துர்க்குணங்களையும் குழியிலிட்டுப் புதைக்க வேண்டும். ஒவ்வொருவனது உள்ளத்திலும் புகுந்து, அவனிடமுள்ள நல்ல அம்சங்களை வியந்து பிரபலப் படுத்தவேண்டும். இவ்வாறு செய்தால் அவன் தன் புகழைக் கேட்டுக் கேட்டு நல்லவனாகி விடுவான். தீய அம்சங்கள் தனவந்தர்களிடம் மட்டுந்தான் இருக்கின்றனவா? ஏழைகள் அத்தனைபேரும் புண்ணியவான்கள்தாமா? எத்தனையோ ஏழைகள் குடிகாரர்களாய், சோம்பேறிகளாய் இருக்கிறார்கள். ஆகவே நாம் வேற்றுமை எதுவும் பாராட்டாது பூதான யக்ஞத்தின்மூலம் அனைவரது நற்குணங்களையும் வெளியே கொணரப் பார்க்கிறோம். இதனால் புரட்சி ஏற்படாதா? இதனாலேயே நாம் முதலாளித்துவத்தைத் தடுக்க இயலாதா?

ஐ: ஒவ்வொருவரும் ஆறில் ஒரு பகுதி அளிக்கிருர் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

வி: விசாரித்து முடிவு காண நான் விரும்பவில்லை; யார் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதையும் நான் முடிவு செய்யமாட்டேன். நான் ஏதோ ஆறிலொரு பங்கு அளியுங்களென்று கேட்கிறேன். அவரவருக்கு எவ்வளவு முடியுமோ கொடுக்கட்டும். இதில் நிர்ப்பந்தம் எதுவும் நான் செய்யப் போவதில்லை. நான் சட்டமொன்றையும் விதிக்கவில்லை; அதை மீறுவோருக்கு, அதன்படி நடந்து கொள்ளாதோருக்கு என்ருல் தண்டனை எதுவும் விதிக்க இயலாது.

## 35. ஹரிஜனங்களின் பிரச்னை

ஐ: இன்றுள்ள வர்ண முறையை நீங்கள் சரியென்று கருதுகிறீர்களா?

வி: வர்ண முறை இன்று வழக்கிலேயே இல்லை. இருந்தால் தந்தையின் தொழிலை பிள்ளை செய்வான்; அவனுக்குப் பிற தொழில்க்ளில் கிடைக்கும் அதே ஊதியந்தான் தன் தொழிலிலும் கிடைக்கும். எல்லாத் தொழில்களுக்கும் ஒரே ஊதியமென்பது வர்ண முறையின் தத்துவம். ஆனல் இன்று அவ்வாறில்லை. ஆகையால் இக்காலத்தில் வர்ணமுறை அனுஷ்டானத்திலேயே இல்லையென்று சொல்லவேண்டியதுதான். இதற்கு ஒரு வர்ணத்தைச் சேர்ந்தவன் வேறு வேலை எதையும் செய்யவே கூடாது என்பது பொருளல்ல. குழந்தையாயிருக்கும்பொழுதே நாம் சில விஷயங்களில் பழக்கம் பெறுகிரோம்; நெசவாளருக்குப் பிள்ளையிருந்தால் அவனுக்குச் சிறு வயதிலிருந்தே பாவு, ஊடு முதலிய நெசவு பற்றிய விபரங்களில் பழக்கம் ஏற்பட்டுவிடும்; வயது வந்ததும் அவனும் நெசவுத் தொழிலை ஏற்பானுயின் விரைவில், சிரமமின்றி தன் பாட்டைப் பார்த்துக் கொள்வான் என்

பதே கருத்து. ஆனால் இன்றோ இதற்கு இடமே இல்லா திருக்கிறது.

**ஐ: பூதானத்தின் பொருட்டு நீங்கள் ஹரிஜனங்களைத் திரட்டுவது பற்றி எண்ணியதுண்டா?**

**வி:** எனக்கு இந்தத் திரட்டல்களிலும் ஸ்தாபனங்களிலும் அதிக நம்பிக்கை கிடையாது. இக்காலத்தில் தொழிலாளி—முதலாளி, ஹிந்து—முஸ்லிம் என்றெல்லாம் கட்டுப்பாடுகள் செய்து, கோஷ்டி சேர்த்து ஸ்தாபனங்கள் அமைக்கிறார்கள். இது வீண் பிரயாசையென்பது என் கருத்து. இதைவிட்டு நாம் மனிதத்தன்மையை வளர்க்கப் பாடுபட்டால் எவ்வளவோ நன்றாயிருக்கும்.

பஞ்சம் தலைவிரித்தாடுமிடங்களிலும் சிலர் தாமளிக்கும் உதவிகளை இது ஹிந்துக்களுக்காக, இது முஸ்லிம்களுக்காகவென்று சொல்லுகிறார்கள். இவ்வாறு செய்தல் தவறு. இதனாலேயே நான் எவ்வித ஸ்தாபனத்தையும் ஒப்புவதில்லை. நாம் நம் தொடர்பை ஒரு ஜாதி அல்லது ஒரு நிலப் பகுதியோடு எல்லையிட்டு நிறுத்திக் கொள்ளக் கூடாது, பரந்ததாய்ச் செய்து கொள்ள வேண்டும். நம் பூதான யக்ஞ இயக்கம் ஏதோவொரு ஜாதி அல்லது சமூகத்தின் நன்மைக்காகத் தோன்றியது என்று எவரும் சொல்லமாட்டார்கள். எல்லோருக்குமே இதில் சிரத்தையுண்டு. ஆனால் மிகவும் பின்தங்கியுள்ளவர்களுக்கு நாம் அதிக உதவி, சேவை செய்யவேண்டியதே. ஆனால் அது சர்வோதயப்பணி எனப்படும். அது குடும்பத்திலுள்ள பலவீனமான பிள்ளையை அதிகம் கவனித்து வைத்தியம் செய்து போஷணை அளித்தல் போன்றது. அதைச் செய்தல் பொதுவாகக் குடும்ப சேவையென்றே கருதப்படும். அதேபோல சமூகத்தில் பின்தங்கியுள்ளவர்களைக் கைதூக்கிவிட வேண்டியதே; ஆனால் அதையும் சமூக சேவையென்றே சொல்லவேண்டும். ஹிந்து தர்மத்திலோ பூத சேவையென்றே சொல்லப்படுகிறது. இதிலிருந்து உள்ளம் எவ்வளவு விசால

மாயிருக்கிறதென்பது தெளிவு. நாம் நேரிடையாகச் செய்யும் சேவையை அருகாமையில், அக்கம் பக்கத்திலேயேதான் செய்கிறோம். ஆகையால் இவ்வேற்றுமைகளையெல்லாம் நாம் அகற்ற விரும்புகிறோம்.

**ஐ : இப்பொழுது தோட்டிகளின், சுத்தித் தொழிலாளரின் நிலைமை படுமோசமா யிருக்கிறது. அவர்களுக்காக உங்களுக்கு என்ன செய்வதாய் உத்தேசம்?**

வி : ஒரு சுத்தித் தொழிலாளி என்னிடம் நிலம் கேட்டார். நான் சுத்தித் தொழில் செய்பவர் விவசாயம் செய்ய விரும்பினால் அவருக்குக் கட்டாயம் நிலம் கிடைக்குமென்று சொன்னேன். அதனால் அவர் செய்து வந்த தொழிலை விடவேண்டி வரும். சுத்தித் தொழிலாளியின் பிள்ளை விவசாயப் பயிற்சி பெற விரும்பினால் நாம் அதற்கு ஏற்பாடு செய்து அவன் பயின்ற பின் அவனுக்கு நிலமளிக்கலாம். ஆனால் அவனுக்கு விவசாயமே தெரியாதிருக்கையில் நிலமளிப்பதால் பயனில்லை. எனவே சுத்தித் தொழிலாளர்களைப் பற்றிய வரையில் அவர்களின் பிள்ளைகளுக்கு நெசவு, தச்சு, தோல் தைத்தல் முதலிய பிறதொழில்களிலும் பயிற்சி யளிக்க ஏற்பாடு செய்யலாம்.

**ஐ : ஹரி ஜனங்கள் பூதான யக்ஞத்திற்கு எவ்வாறு உதவக் கூடும்?**

வி : ஹரிஜனங்களிடமும் சிறிது சிறிது நிலமிருக்கும். அதை அவர்கள் கொடுக்கலாம். நிலமில்லாவிட்டால் சிரம (உழைப்பு) தானம் செய்யலாம். உழைப்பதற்கும் தென்பில்லாவிட்டால் சம்பத்து தானம், செல்வத்தில் அல்லது வருமானத்தில் ஒரு பகுதி அளிக்கலாம். உள்ள பொருளையெல்லாம் அல்ல, ஒரு பகுதி மட்டுமளித்தால் 'போதும். இருபதில் ஒரு பகுதியோ, வீசம் பங்கோ கொடுக்கலாம். இவையன்றி கிராமங் கிராமமாய்ச் சென்று இது பற்றி மக்களுக்குச் சொல்லலாம்.

ஐ: சர்வோதய சமாஜத்தில் ஹரிஜனங்களின் பங்கென்ன ?

வி: சர்வோதய சமாஜம் ஒரு சமுத்திரம். அதில் ஆறு ஒன்றுகூட இல்லை. சமுத்திரத்தில் போய்க் கலக்கு முன் பெரிய, சிறிய ஆறுகள் என்று இருக்கும். கலந்த பிறகோ அவை இருந்த இடமே தெரியாது போய்விடும். முதலில் ஹரிஜன் முதலிய வேற்றுமைகள் அகலும், பிறகுதான் சர்வோதய சமாஜம் தோன்றும். சர்வோதய சமாஜமென்பது நாம் தனியாக உருவாக்குவதல்ல. இன்றைய சமூகத்தையே தான் சர்வோதய சமாஜமாக்க வேண்டும். நீங்கள் சமுத்திரத்தில் ஆற்றுக்குரிய இடமென்ன என்று கேட்டால் கடலுக்கு முந்தியது ஆற்றின் இடம் என்று நான் சொல்லுவேன். சர்வோதய சமாஜத்தில் வேற்றுமைகளுக்கு, ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமில்லை. நீங்கள் சர்வோதய சமாஜம் அரசியல் கட்சியானல் அதில் ஹரிஜனங்களுக்கு இடமிருக்குமா, இராதா என்று கேட்டால் நான் சர்வோதய சமாஜம் உருவான பிறகு தேர்ந்தெடுக்கப் படுவோர் அத்தனை பேரும் நம்மவரே ஆவர் என்று சொல்லுவேன். இது நடைபெருத வரை சர்வோதய சமாஜமும் தோன்ருது. சர்வோதய சமாஜம் தோன்றிவிட்டதென்ருல் எல்லா வேற்றுமைகளும் அகன்று விட்டன என்று ஆகும்.

## 36. ஜீவனதானம்

ஐ: ஜீவன தானிகளுக்கு எத்தகைய உதவி கிடைக்கும் ?

வி: அவர்களை எல்லோரும் கேலி செய்வார்கள். இது அவர்கள் பெறக்கூடிய முதல் உதவி. உங்களை முதலில் பரிகாசம் செய்வார்கள்; அதை நீங்கள் வாய் திறவாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டாவது, ஓய்வு ஒழிவின்றி அலைய வேண்டியிருக்கும். இவை

இரண்டிற்கும் நீங்கள் உடன்பட்டால் உங்களுக்கு மரியாதை ஏற்படும். பிறர் உதவியை எதிர்பாராமல் தனித்து நின்று வேலை செய்ய நீங்கள் சித்தமாக வேண்டும். எவரும் உதவிக்கு வராவிட்டாலும் நாம் பணிபுரிய வேண்டியதே என்று நீங்கள் புரியக் கிளம்ப வேண்டும். ஆபத்து நேரங்களில் நீங்கள் பரஸ்பரம் உதவிக் கொண்டு ஒருமிக்க நின்று வேலை செய்ய வேண்டும். இவ்வாறு உங்களது சகோதரக் குழு ஒன்று தோன்ற வேண்டும். ஆனல் அதோடு கூடவே ஏகாகி பௌருஷம் குர்யாத்—ஏகாகீ பௌருஷம் குர்யாத்—தனித்து நின்று காரியங்களைச் சாதித்தல் வேண்டும் என்பதையும் மறத்தலாகாது.

ARCHIVES LIBRARY
No.
109073
MADRAS
YZW M95
N56

# எமது காந்தீய-சர்வோதய இலக்கியம்

## மகாத்மா காந்தி எழுதியவை

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சர்வோதயம் : (ரஸ்கினின் "Unto This Last"-இன் சாரம் | ... | 0 | 5 |
| ஆசிரம வாழ்க்கை | ... | 1 | 4 |
| ராம நாமம் | ... | 0 | 12 |
| நீதி தர்மம் | ... | 0 | 4 |
| சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் | ... | 0 | 4 |
| சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் | ... | 1 | 0 |
| ராட்டை—தத்துவ விளக்கம் | ... | 1 | 4 |
| ஆசிரம பஜனாவளி | ... | 0 | 8 |
| காந்திஜியின் சுயசரிதம்—சுருக்கம் | ... | 2 | 0 |
| கீதாபோதனை | ... | 0 | 12 |

## காந்திஜி—கஸ்தூரிபா பற்றியவை

| | | | |
|---|---|---|---|
| எமது பா : வனமாலா பரீக் | ... | 1 | 4 |
| எமது பா : சுசீலா நய்யர் | ... | 1 | 4 |
| காந்திக் காட்சிகள் : காகா காலேல்கர் | ... | 1 | 4 |
| பாபூ—என் தாய் : மனு காந்தி | ... | 0 | 12 |
| பாப்பாவின் காந்தி : ஜுகத்ராம் தவே | ... | 0 | 12 |

## தத்துவ நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| கீதைப் பேருரைகள் : வினோபா | | | |
| சாதா பைண்டு | ... | 1 | 0 |
| காலிகோ பைண்டு | ... | 2 | 8 |
| வினோபாவின் குரல் | ... | 0 | 8 |
| காந்தியும் மார்க்ஸும் : மஷ்ரூவாலா—வினோபாஜியின் முன்னுரையுடன் | ... | 1 | 4 |
| காந்தீய நவநீதம் : கிசோரிலால் மஷ்ரூவாலா | ... | 1 | 8 |

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| காந்தீயப் பொருளாதாரம் : | | | |
| ஜே. சி. குமரப்பா | ... | 1 | 4 |
| ஐரோப்பாவின் படிப்பினைகள் : | | | |
| ஜே. சி. குமரப்பா | ... | 0 | 6 |
| சர்வோதயமும் உலக அமைதியும் | | | |
| ஜே. சி. குமரப்பா | ... | 0 | 2 |
| சுயம்பூர்ண கிராமம் | ... | 0 | 5 |
| புக்கர் வாஷிங்டன் : வ. வே. சு. ஐயர் | ... | 0 | 8 |
| தன்னம்பிக்கை : எமர்சன் : | | | |
| வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்பு | ... | 0 | 12 |
| மலஜல சுத்தி : வல்லபஸ்வாமி | ... | 0 | 8 |
| துப்புரவு விஞ்ஞானம் : தீரேந்திர மஜூம்தார் | ... | 0 | 8 |

## கதர் சாஸ்திரம்

| | | | |
|---|---|---|---|
| நூற்புக் கணிதம் : கிருஷ்ணதாஸ் காந்தி | | | |
| முதல் பாகம் | ... | 0 | 6 |
| இரண்டாம் பாகம் | ... | 0 | 8 |
| மூன்றும் பாகம் | ... | 0 | 14 |
| நான்காம் பாகம் | ... | 1 | 0 |
| நூற்புக்கலையின் நுணுக்கங்கள் | ... | 1 | 0 |
| தக்ளியால் நூற்பதெப்படி ? | ... | 0 | 8 |
| கைராட்டை—அதன் சரித்திரமும் புத்துயிரும் | ... | 1 | 8 |
| கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை | ... | 1 | 0 |
| பட்டை போட சுலப வழி | ... | 0 | 4 |
| நரம்பு செய்தல் | ... | 0 | 8 |
| பருத்திப் பிரச்னை | ... | 0 | 6 |
| கதர் நெசவு | ... | 0 | 8 |

இதர விபரங்களுக்கு :

சர்வோதயப் பிரசுராலயம்

24, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

# எமது பூதானப் பிரசுரங்கள்

*

| | |
|---|---|
| பூதான உதயம் | —விநோபா |
| சர்வோதயப் பிரகடனம் | ,, |
| வணிகரே ! வாரீர் ! | ,, |
| கிராமங்களுக்கு ஆரோக்கிய திட்டம் | ,, |
| கிராமந்தோறும் சுயராஜ்யம் | ,, |
| ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | ,, |
| பூதான ஐய விளக்கம் | ,, |
| சர்வோதய ஆதாரங்கள் | ,, |
| ஜீவன் தானம் | —ஜயப்பிரகாச்ஜி |
| பூதானப் புரட்சிக்கு அறைகூவல் | ,, |
| சம்பத்துதான யக்ஞம் | —ஜாஜுஜி |
| பூதானத்தின் புரட்சித் தன்மை | —தர்மாதிகாரி |
| மனிதப் புரட்சி | ,, |
| பூதானமும் கிராம ராஜ்யமும் | —சங்கரராவ் தேவ் |
| பூதான ஜோதி | —விமலாதக்கர் |
| ஒரு மாபெரும் அநீதி | —டால்ஸ்டாய் |
| பூதானப் பாடல்கள் | —ராமலிங்கம் பிள்ளை |
| விநோபா வாழ்க்கை | |
| விநோபாவின் குரல் | —நெ. சிவசுப்பிரமணியம் |
| பூதான வெள்ளம் | —ம. சௌத்ரி |
| முதல் கிராமதானம் : மங்கரோட் | |
| தமிழ் நாட்டில் விநோபாஜியின் பிரவேசம் | |
| சென்னை நகரில் விநோபாஜி | |

---

கிடைக்குமிடங்கள் :—

கதர் வஸ்திராலயங்கள்.

சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்.